பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 158

சனிக்கிழமை
03 மே 2025

சித்திரை 20 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056




## உள்ளூராட்சித் தேர்தல்

# இன்று நள்ளிரவுடன் பரப்புரைகள் நிறைவு

**கொழும்பு, மே 3**

**உள்ளூராட்சித் தேர்தலுக்கான தேர்தல் பரப்புரைகள் இன்று நள்ளிரவுடன் நிறைவுக்கு வரவுள்ளன. இறுதிப் பரப்புரை நாளான இன்று கட்சிகள் சூறாவளிப் பரப்புரையில் ஈடுபடவுள்ளன. தேர்தலை முன்னிட்டு பாதுகாப்பு நடவடிக்கைகளும் இன்று பலப்படுத்தப்பட்டுள்ளன.**

15

## ஐ.தே.க.வும் பெரமுனவும் மீளெழுச்சி!

கொழும்பு, மே 3
ஐக்கிய தேசியக் கட்சியும், பொதுஜன பெரமுனவும் மீண்டெழுந்து வருகின்றன என்று

15

## முறைப்பாடு 4,000+

கொழும்பு, மே 3
2025ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் இதுவரை 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட

15

## மே 8, 9 திகதிகளில் நாடாளுமன்றம் கூடும்!

கொழும்பு, மே 3
நாடாளுமன்றம் இம்மாதம் 8ஆம், 9ஆம் திகதிகளில் கூடவுள்ளதாக நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்ற அலவல்கள் குறித்து, சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டம் நேற்று இடம்பெற்றது. இதன்போது, நாடாளு

15

## பிரதித் தேர்தல் ஆணையாளராக சசீலன் நியமனம்



யாழ்., மே 3
யாழ்ப்பாண மாவட்டத்தின் பிரதித் தேர்தல் ஆணையாளராக இ.சசீலன் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

15

## தெல்லிப்பழை மருத்துவமனையில் நேற்றுப் பணிப்புறக்கணிப்புப் போர்

யாழ்ப்பாணம், மே 3
தெல்லிப்பழை மருத்துவமனையில் நிலவும் நிர்வாகச் சீர்குலைவை சரிசெய்யுமாறு வலியுறுத்தியும், மருத்துவ வசதிகளை மேம்படுத்தவேண்டும் என்று தெரிவித்தும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் நேற்று அடையாளப் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இது தொடர்பில் போராட்டத்தில் ஈடுபட்ட மருத்துவர்கள் தெரிவித்ததாவது:-

15

## தமிழின எதிர்காலத்தை தீர்மானிக்கும் தேர்தல்!



### சிந்தித்து வாக்களிக்குமாறு சாணக்கியன் எம்.பி. அழைப்பு

கொழும்பு, மே 3
உள்ளூராட்சித் தேர்தலை ஒரு வட்டாரத்துக்கான தேர்தலாக பார்க்கமுடியாது. உண்மையில் இந்தத் தேர்தல் தமிழினத்தின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கப்போகும் தேர்தலாகவே அமைந்துள்ளது என்று தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.
அவர் மேலும்

15

## வியட்நாமுக்கு இன்று பயணமாகின்றார் அநுர



கொழும்பு, மே 3
ஜனாதிபதி அநுரகுமார இன்று நள்ளிரவு வியட்நாமுக்குப் புறப்பட்டுச் செல்லவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
வியட்நாம் ஜனாதிபதியின் அழைப்பின் பேரிலேயே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நாளைமுதல் எதிர்வரும் 6ஆம் திகதிவரை வியட்நாமுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளார். இதைமுன்னிட்டே இன்று நள்ளிரவு அவர் நாட்டிலிருந்து புறப்படவுள்ளார்.
ஜனாதிபதி அநுரவின் இந்தப் பயணத்தின்போது, இலங்கைக்கும் வியட்நாமுக்கும் இடையில் சிறப்பு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளன. அத்துடன், வியட்நாமில்

15

## நல்லை ஆதீன குருமுதல்வர் நேற்றுத் தீயுடன் சங்கம்!



படம்:- சிவசாந்தன்

யாழ்ப்பாணம், மே 3
நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் புகழுடல் நேற்று மாலை தீயுடன் சங்கமமானது.
திடீர் உடல்நலக் குறைவு காரணமாக, கடந்த சில

15

## புலிகளின் தங்கம் அரசிடம் ஒப்படைப்பு!

கொழும்பு, மே 3
போர்க்காலத்தில் புலிகளிடம் இருந்து இலங்கை இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட விடுதலைப்புலிகளின் தங்கம், வெள்ளி உள்ளிட்ட பெறுமதியான பொருள்களை அரசிடம் ஒப்படைப்பதற்காக பதில் பொலிஸ்மா அதிபரிடம் நேற்றுக் கையளிக்கப் பட்டுள்ளன.
பத்தரமுல்லயில் உள்ள இராணுவத் தலைமையகத்தில் வைத்தே இந்த ஆபர

15



‘இனித்தான் காதுக்கும் கண்ணுக்கும் கொஞ்சம் நிம்மதி கண்டியளோ’

## இனவாதப்பரப்புரையில் தமிழ் அரசியல்வாதிகள்

### அமைச்சர் சந்திரசேகர் குற்றச்சாட்டு



யாழ்ப்பாணம், மே 3
வடக்குத் தமிழ் அரசியல்வாதிகள் பலர், வாக்குகளை வேட்டையாடுவதற்காக ராஜபக்சக்களின் சகோதரர்களாக மாறி இனவாதத்தைக் கையிலெடுத்துள்ளனர் என்று கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.
யாழ்ப்பாணம் வேலணையில் நேற்று நடைபெற்ற தேர்தல் பரப்பு

15

## சகல பேரினவாதக் கட்சிகளையும் அடியோடு புறக்கணிக்கவேண்டும்!

### கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு



யாழ்ப்பாணம், மே 3
இதற்கு முன்னர் ஆட்சிசெய்த இனவாதக் கட்சிகளுக்கும் அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்திக்கும் எந்த வித்தியாசமும் இல்லை. ஆதலால், அனைத்துப் பேரினவாதக் கட்சிகளையும் நாங்கள் புறக்கணிக்கவேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**

| | |
|---|---|
| திகதி | 02.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4061 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 47 64 77 79 |
| விசேட எழுத்து | E |

**ஹந்தஹண ராசி சுப பலன்**

| | |
|---|---|
| திகதி | 02.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1128 |
| வெற்றி இலக்கினம் | துலாம் |
| வெற்றி இலக்கங்கள் | 09 24 40 43 |

**NLB ஜய**

| | |
|---|---|
| திகதி | 02.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0087 |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கங்கள் | 4 5 1 8 |

**மெகா பவர்**

| | |
|---|---|
| திகதி | 02.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2167 |
| ஆங்கில எழுத்து | T |
| சுப்பர் இலக்கம் | 26 |
| வெற்றி இலக்கங்கள் | 02 61 74 77 |

**மஹஜன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 02.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5819 |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கங்கள் | 1 1 9 4 3 6 |

**தன நிதானய**

| | |
|---|---|
| திகதி | 02.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1849 |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கங்கள் | 19 41 45 65 |
| விசேட எழுத்து | V |

**அத சம்பத**

| | |
|---|---|
| திகதி | 02.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0394 |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கங்கள் | 9 4 3 6 |

# சிங்களப் பேரினவாதத்தை இனியும் நம்பி ஏமாறாதீர்!

*காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கம் வலியுறுத்து*

**யாழ்ப்பாணம், மே 3**

**ஆட்சிக்கு வந்த ஒட்டுமொத்த சிங்கள அரசாங்கங்களும் தொடர்ந்து எம்மை ஏமாற்றிக்கொண்டிருக்கின்றன. இனியும் நாம் சோரம்போகாது சர்வதேசத்துக்கு எமது ஒற்றுமையை எடுத்துக்காட்டும் முகமாக ஒட்டுமொத்த தமிழ் மக்களின் இருப்புக்கும் நிரந்தர அரசியல் தீர்வுக்குமாக தமிழ்த்தேசியப் பற்றோடும் உணர்வோடும் பயணிக்கின்ற தமிழ்தேசியக் கட்சிகளுக்கு பெறுமதியான வாக்குகளை இடுவோம்.**

இவ்வாறு வடக்கு-கிழக்கு வலிந்து காணாமாலாக்கபட்ட உறவுகளின் சங்கத்தின் தலைவி யோகராஜா கலாரஞ்சினி யாழ். ஊடக அமையத்தில் சந்திப்பொன்றை நடத்தித் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது ஆட்சியில் இருக்கும் புதிய அரசாங்கமும் குறுகிய காலத்துக்குள் அது செய்வோம் இது செய்வோமெனக் கூறிய போதும் கண்ணீரோடு நீதிகேட்டு நிற்கும் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளுக்குத் தீர்வை வழங்கவில்லை.

உள்ளூராட்சித் தேர்தல் எங்களுக்குரிய தேர்தல். எங்கள் மாவட்டத்துக்கும் எங்களது கிராமத்துக்கும் உரித்தான தேர்தல்.




எமது உள்ளூராட்சிசபைகளினூடாக குறைந்தளவு பிரதேச அபிவிருத்தியை மேம்படுத்தலாம். இந்த சபைக்கு ஊடாக பெறப்படும் பெருமளவு நிதி மக்களுடையது. அந்தப் பணம் அந்தப் பிரதேச அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படவேண்டும்.

எனவே தமிழ் மக்களாகிய நாங்கள் சிங்களக் கட்சியினருக்கும் சர்வதேசத்துக்கும் எமது ஒற்றுமையை எடுத்துக்காட்டும் முகமாக ஒன்றுதிரண்டு தமிழ்த் தேசியப் பற்றோடும் உணர்வோடும் பயணிக்கின்ற தமிழ்தேசியக் கட்சிகளுக்கு உங்களுடைய பெறுமதியான வாக்குகளை அளியுங்கள். எங்களுக்கான சபைகள் எமது கைகளுக்கு வரும்போதுதான் எமக்கான பலம் எமது கைக்கு வரும் - என்றார். (ச-125)

**சுபிரி தன சம்பத**

| திகதி | தினம் | வெற்றி வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 02.05.2025 | வெள்ளிக்கிழமை | 0527 | K | 6 0 1 3 3 7 |

**Super Ball DLB**

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 02.05.2025 | வெள்ளிக்கிழமை | 2793 | Z | 06 66 71 77 |

**சனிதா DLB**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 02.05.2025 | வெள்ளிக்கிழமை | ,M | 06 09 22 29 | 4954 |

**SASIRI DLB**

| திகதி | தினம் | வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|
| 02.05.2025 | வெள்ளிக்கிழமை | 0674 | 12 21 25 |

**லக்ன ராசி DLB**

| திகதி | தினம் | ராசி | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 02.05.2025 | வெள்ளிக்கிழமை | ரிஷபம் | 12 28 31 48 | 4505 |

**KAPRUKA DLB**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 02.05.2025 | வெள்ளிக்கிழமை | Y | 32 | 01 28 50 73 | 1969 |

**அத கோடிபதி DLB**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 02.05.2025 | வெள்ளிக்கிழமை | W | 20 68 71 72 | 2619 |



## வாகன இறக்குமதியில் கட்டுப்பாடுகள் தளர்வு

கொழும்பு,மே 3

வாகன இறக்குமதி மீதான சில கட்டுப்பாடுகளை நீக்கும் வகையில் நிதி அமைச்சு புதிய வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் ஏப்ரல் 29 ஆம் திகதி முதல் நடைமுறைக்குவரும் வகையில் குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. இதனூடாக, இறக்குமதி செய்யப்பட்டும் பல்வேறு காரணங்களால் விடுவிக்கமுடியாமல் துறைமுகத்தில் காணப்படும் பல வகையான கார்களை விடுவிக்கமுடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

உதயன் மீதான தாக்குதல்

## உயிரிழந்த பணியாளர்களின் 19ஆவது அஞ்சலி நேற்று!

யாழ்ப்பாணம், மே 3



2006ஆம் ஆண்டு மே மாதம் 2ஆம் திகதி உதயனின் அலுவலகத்துக்குள் அத்துமீறி நுழைந்த ஆயுததாரிகள் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்ட பணியாளர்களான பி.ஜோர்ஜ் சகாயதாஸ், ஆர். ரஞ்சித்குமார் ஆகியோரின் 19ஆவது அஞ்சலி நிகழ்வுகள் நேற்று நடைபெற்றன.

உதயன் அலுவலகத்தில் இடம்பெற்ற இந்த அஞ்சலி நிகழ்வில், அலுவலகப் பணியாளர்கள், நலன்விரும்பிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (ம)




## சிங்களக் கட்சிகளை ஆதரித்து தமிழின இருப்பை அழிக்காதீர்!

*மாகாணசபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், மே 3

உள்ளூராட்சிமன்றத் தேர்தலிலும் சிங்களக் கட்சிகளுக்கு வாக்களித்து எமது தமிழ்த் தேசிய இருப்பை அழித்துவிடக்கூடாது, ஐந்து தமிழ்க் கட்சிகள் கூட்டாக இணைந்து போட்டியிடுகின்ற ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி யினரின் கரங்களைப் பலப்படுத்துங்கள் என்று மாகாணசபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் தெரிவித்துள்ளார். மனங்குனாய் பிள்ளையார் ஆலய முன்றலில் அண்மையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது பிரதேசத்தை நாமே ஆளுகின்ற அதிகாரத்தை உருவாக்கவேண்டும். சிங்களப் பிரதேசத்தில் தமிழ்க் கட்சி தலைமையில் சிங்கள வேட்பாளரை நிறுத்தினாலும் அந்த மக்கள் அவர்களுக்கு வாக்களிக்கமாட்டார்கள். அவர்கள் தமிழ்த் தலைமையின் கீழ் தாம் இருப்பதை விரும்பமாட்டார்கள். எனவே நாமும் எமது அதிகாரங்களை விட்டுக்கொடுக்கக்கூடாது. எமது இருப்பைத் தக்கவைக்க எம்மிடமே அதிகாரிகள் இருக்கவேண்டும்- என்றார். (ச-28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம்–நாகபட்டினம் கப்பல்சேவை கட்டணம் குறைப்பு

மன்னார், மே 3

தமிழகம் நாகப்பட்டினம் மற்றும் யாழ்ப்பாணம் காங்கேசன் துறைக்கு இடையிலான கப்பல் சேவை முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், கட்டணம் குறைக்கப்பட்டுள்ளதாக கப்பல் சேவையை முன்னெடுத்துள்ள சுபம் நிறுவனத்தின் தலைவர் சுந்தர்ராஜன் தெரிவித்துள்ளார்.

நாகபட்டினத்தில் இருந்து இலங்கை காங்கேசன் துறைக்கு கடந்த ஓகஸ்ட் மாதம் முதல் சிவகங்கை கப்பல்சேவை இயக்கப்பட்டு வருகின்றது. அதில் கோடை விடுமுறையை முன்னிட்டு பயணிகளைக் கவரும் விதமாக தற்போது 8,500 ரூபாயாக உள்ள சென்று வருவதற்கான கட்டணம் 8000 ரூபாவாக குறைக்கப்படுகிறது. மேலும் தற்பொழுது 10 கிலோ வரை அனுமதிக்கப்படும் இலவச லக்கேஜ் இனி 22 கிலோ வரை அனுமதிக்கப்படும். அதில் 7 கிலோ கைப்பையும், 15 கிலோ லக்கேஜ் உம் இலவசமாக அனுமதிக்கப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச-56)



# புதையல் தோண்டிய ஐவர் கைது

முல்லைத்தீவு, மே 3

முல்லைத்தீவு, செம்மலையில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு சிறப்புப் படைமுகாம் அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் கொக்குளாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களில் ஒருவர் இராணுவப்பொறியியலாளர் படையின் ஓய்வுபெற்ற கப்டனும், கடைசியாக கொக்காவில் முகாமில் கடமையாற்றியவருமாவார். மற்றுமொரு சந்தேகநபர் ஓய்வு பெற்ற துணை பொலிஸ் ஆய்வாளர் ஆவார். இவர் கடைசியாக குருநாகல் தலைமையக காவல் நிலையத்தில் பணியாற்றியுள்ளார் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (எ-19)

# சப்ரகமுவ மாணவன் மரணம்: விசாரணை நடத்துவதற்கு குழு

கொழும்பு, மே 3

சப்ரகமுவ பல்கலைக்கழகத் தொழில்நுட்பப் பீடத்தில் இரண்டாம் ஆண்டு மாணவர் ஒருவர் திடீரென உயிரிழந்ததற்கான சூழ்நிலைகள் தொடர்பாக முழுமையான விசாரணையை நடத்த விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

விசாரணைக் குழுவின் அறிக்கை கிடைத்தவுடன், பல்கலைக்கழக நிர்வாகம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்று கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. இந்தத் திடீர் மரணம், பகிடிவதையின் விளைவாக ஏற்பட்டது என்று பல்வேறு சமூக ஊடகங்களில் பரவிவரும் தகவல்கள் தொடர்பாகவும் அமைச்சு உன்னிப்பாகக் கவனம்செலுத்தியுள்ளது. இதுபோன்ற ஒரு சம்பவம் கண்டுபிடிக்கப்பட்டால், தற்போதுள்ள சட்டத்தின்படி அதற்குப் பொறுப்பான அனைத்துத் தரப்பினருக்கும் எதிராக அமைச்சு அதிகபட்ச நடவடிக்கையை எடுக்கும் என்றும்தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# பசளை விலையுயர்வு விவசாயிகள் அவதி!

பசளைகளின் விலைகளை அரசாங்கம் அதிகரித்துள்ளமை காரணமாக விவசாயிகள் பெரும் பாதிப்படைந்துள்ளனர்.

கடந்த காலங்களில் பசளை விலை கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டிருந்ததுடன்,அவற்றை கொள்வனவு செய்வதற்காக விவசாயிகளுக்கு மானியமும் வழங்கப்பட்டது. குறித்த நிவாரணக் கொடுப்பனவு கூட இதுவரை 75 சதவீதத்துக்கும் அதிகமான விவசாயிகளுக்கு வழங்கப்படவில்லை எனவும் விவசாயி கள் சுட்டிக்காட்டினர் (ச-இ)

# கடமைக்கு இடையூறு இருவர் கைதாகினர்!

வவுனியா,மே 3

வவுனியா நகரத்தில் சுகாதாரப் பரிசோதகரின் கடமைக்கு இடையூறு விளைவித்த இருவர் வவுனியாப் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா யாழ். வீதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்புநிலையத்துக்கு அருகில் வாகனம் ஒன்றில் வந்த இருவர் உணவுப் பொருள்களை விற்பனைசெய்துள்ளனர். குறித்த வாகனத்தை சுகாதார பரிசோதர்கள் பரிசோதனை செய்ய முற்பட்டபோது விற்பனையாளர்களினால் அவர்களின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்தப்பட்டது. இதனால் அந்தப் பகுதியில் சற்றுநேரம் குழப்பநிலை ஏற்பட்டது.

எரிபொருள் நிரப்புநிலையத்தின் அருகில் தின்பண்டங்களை விற்பனை செய்வதனால், உணவில் நச்சுவாயுக்கள் கலக்கும் சந்தர்ப்பம் ஏற்படுவதுடன் அந்தப் பகுதியில் கழிவுநீர் வழிந்தோடும் கால்வாயும் காணப்படுகின்றது. எனவே இவ் வாகனத்தை வேறுபகுதிக்கு எடுத்துச்சென்று அங்கே விற்பனை செய்யுமாறு சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தபோது விற்பனையாளர்கள் அதனை ஏற்கமறுத்து முரண்பட்டனர். இதனை அடுத்து சுகாதாரப் பரிசோதகர்களால் வவுனியா பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு வருகைதந்த பொலிஸார் குறித்த இருவரையும் கைதுசெய்தனர். (ச-110)






கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு எண்டு முந்திச் சொல்லிச்சினம். ஆனால் இப்ப அதைக் கொஞ்சம் மாத்தோணும். ஆர்ட்ஸ் தவிர வேற பாடம் படிச்சவைக்குத்தான் இப்ப எல்லா இடமும் சிறப்பாம். வெளியாலகூட போகத் தேவையில்லைபள்ளிக்கூடங்களிலேயேசயன்ஸ், மற்ஸ் படிக்கிறவையைத்தான் ரீச்சர்மாரும், வெளியாக்களும் உயர்வாப்பாக்கினம். ஆர்ட்ஸ் எடுக்கிறவையை ஏதோ ஏலாவாளியள் மாதிரித்தான் பாக்கினமாம். இந்தப் பாரபட்சம் பற்றி, இந்தமுறை ஏ.எல். எக்ஸாம் ரிசல்ட் வந்த அடுத்தநாள் பட்சி சொல்லியிருந்தது. அதுக்குப் பிறகு கிடைச்ச ஒரு தகவல் எப்பிடியெல்லாம் பள்ளிக்கூடங்களில பாடங்களை வைச்சு ஏற்றத்தாழ்வு பாக்கினம் எண்டதைக் காட்டிச்சுது.

கொஞ்சம் வசதி குறைவான பிள்ளையள் படிக்கிற பள்ளிக்கூடம் அது. அங்க படிக்கிற பிள்ளையள் வசதி இருந்தால், மற்றப் பள்ளிக்கூடங்கள்மாதிரி கூட ரிசல்ட் எடுப்பினம் எண்டு புதிசா அங்க போன அதிபர் யோசிச்சு, வெளிநாட்டில இருக்கிறவையிட்ட உதவி கேட்டிருக்கிறார். அவையளும் 'பிள்ளையள் படிக்கிறதுக்கு உதவி செய்யவேண்டியது எங்கட கடமையெல்லோ. நீங்கள் எத்தினை பிள்ளையள் ஏல்.எல். படிக்கினம் எண்டதையும், என்னென்ன பாடங்கள் எடுக்கினம் எண்டதையும் எங்களுக்கு அனுப்புங்கோ. நாங்கள் உதவி செய்யிறம்' எண்டு சொல்லியிருக்கினம். அந்த அதிபரும் அடுத்தநாளே எல்லா விவரங்களும் அனுப்பிட்டார். 'அந்தப் பிள்ளைகளுக்கு அடுத்த மாதத்தில இருந்து ரியூசன் செலவு,கொப்பி,பேனை வாங்கிற செலவு, வெளியால புத்தகங்கள் வாங்கிற செலவு எண்டு கனக்க இருக்கும். அதால ஒவ்வொரு மாதமும் ஒரு குறிப்பிட்ட தொகை அவைக்குக் குடுக்க நாங்கள் முடிவுசெய்திருக்கிறம். அதை உங்களுக்கு அனுப்புவம், நீங்கள் பிள்ளையளுக்கு குடுங்கோ' எண்டு அந்த வெளிநாட்டுக்காரர் சொல்லியிருக்கினம்.

அடுத்த மாதம் எல்லாருக்கும் காசு வந்திருக்கு. அதிலதான் பெரும் பம்பல். சயன்ஸ், மற்ஸ் படிக்கிற பிள்ளையள் ஒவ்வொருத்தருக்கும் ஏழாயிரம் ரூபாப்படியும், கொமர்ஸ் படிக்கிறவைக்கு ஆளுக்கு மூவாயிரப்படியும், ஆர்ட்ஸ் எடுக்கிறவைக்கு ஆளுக்கு ஆயிரம் ரூபாப்படியும் குடுக்கச் சொல்லி வெளிநாட்டுக்காரர் காசை அனுப்பியிருக்கினம். ஆர்ட்ஸ் எடுக்கிற பிள்ளைக்கும் சயன்ஸ், மற்ஸ் எடுக்கிற பிள்ளைக்கும் ஆறாயிரம் ரூபா வித்தியாசம். பிள்ளையள் படிக்கோணும் எண்ட நல்ல நோக்கத்துக்காகத்தான் அவையள் காசை அனுப்பினவை. அதைப் போற்றவேணும். ஆனால், இப்பிடிக் காசை அனுப்பினவை ஒரு விசயத்தை மனதில வைச்சிருக்கோணும். சயன்ஸோ, மற்ஸோ, ஆர்ட்ஸோ எந்தப் பாடத்தை எடுத்தாலும் ரியூசனுக்கும், புத்தகம் கொப்பிக்கும் கிட்டத்தட்ட ஒரேயளவு காசுதான் செலவாகும். அதோட எல்லாப் பாடமும் ஒண்டுக்கொண்டு குறைஞ்சதுமில்லை. ஒவ்வொரு பாடத்திலையும் நல்லாப் படிச்சு, சரியான துறையைத் தெரிவுசெய்தால் எல்லாரும் மேல வரலாம். அதைவிட்டிட்டு இப்பிடி உதவிக்காசு குடுக்கிறதிலகூட சயன்ஸ், மற்ஸ் எண்டா பெரிசு, ஆர்ட்ஸ் எண்டால் குறைவெண்டு பேதம் காட்டுறது அவ்வளவு நல்லதில்லை கண்டியளோ.

padsi@uthayan.com –பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## சேனாதிராஜா செல்லக்கண்டு



**தோற்றம்**
**19.06.1934**

**மறைவு**
**01.05.2025**

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும், கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சேனாதிராஜா செல்லக்கண்டு அவர்கள் நேற்று (01.05.2025) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலக்கென்றவர்களான பொன்னையா – செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான செல்லையா - சின்னக்குட்டி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்லையா சேனாதிராசா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தியாகராசா, அன்னபாங்கியம் அவர்களின் அன்பு சகோதரியும், காலஞ்சென்ற இந்திராணி, செல்வநாயகம், சுகந்தமலர், தவமலர், முருகானந்தன், வேல்முருகன், தங்கமலர், ராஜ்குமார் ஆகிமோரின் அன்புத் தாயாரும். கதிர்காமத்தம்பி, சகுந்தலாதேவி, செல்வரட்ணம், காலஞ்சென்ற திருஞானசம்பந்தர், மோகமலர், இராஜகன்னிகா, சிவநேசன், பியூலா ஆகியோரின் அன்பு மாமியாரும். லோகேஸ்வரன் - சியானி, சுஜீவன் - தர்சனா, ரஜீவன்- சோபிகா அபர்ணா-இளங்கீரன், கம்ஷி- ஆனந்த், துசிகா - ஆரூரன், சோபிகா - ரஜீவன், செந்தூரன். வனஜா, சிந்துஜா-அவைஸ், ஆரூரன் - துசிகா, அர்ச்சனா-நிராஜ் . நிரோஜினி, திருவரன், அகிலினி, யோகரூபன், அபிநயா - கஜேந்திரன், சகானா, கிருஷாந்த்-தர்சினி, சேயோன்-தபிதா, சேமாள், சேந்தன், தேவகி - அகிலன், தெய்வச்சந்திரன் - வாணி, தோணுகா, ஜெப்பிரகாஷ், கரிஷ்மா, ரஜீவ்குமரன், டன்மாறீ ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.05.2025) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோண்டாவில் கிழக்கு கட்டையாலடி இந்து மயானத்திற்க்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அம்மன் கோவில் வீதி,**
**கோண்டாவில்.**

**தகவல்: குடும்பத்தினர்**
**சே. வேல்முருகன் (மகன்- veka)**
**077 969 7111**

(CS/58147) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோமசுந்தர தேசிகர் மறைவு இந்துமத மக்களுக்கு இழப்பு

## சர்வதேச இந்துமத பீடம் இரங்கல்

யாழ்ப்பாணம், மே 3

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் மறைவு பெரும் துயரம் என சர்வதேச இந்துமத பீடச் செயலாளர் கலாநிதி சிவஸ்ரீ ராமசந்திர குருக்கள் பாபு சர்மா தெரிவித்துள்ளார். நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் குருமுதல்வரின் மறைவையிட்டு வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் உள்ளதாவது-

மிகுந்த சாதுவானவர், தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக அவ்வப்போது தன்னால் இயன்ற அளவு குரல்கொடுத்தவர். இந்து மதத்துக்கு ஒரு பெருமை வாய்ந்த ஆன்மீகத் தலைவராகச் செய்யற்பட்டவர் . நாவலர் 200ஆவது நூற்றாண்டைக் கொண்டாடுவதற்கு முன்னாள் பிரதமரும் புத்த சாசன மத மற்றும் கலாசார அமைச்சராகவும் இருந்த மஹிந்த ராஜபக்சவின் தலைமையில் அலரிமாளிகையில் நாவலர் 200ஆவது நூற்றாண்டை பிரகடனப்படுத்தியபோது தலைமை வகித்தவர். நல்லதொரு ஆன்மீகத் தலைவரை இழந்தது இந்து மத மக்களை வேதனைக்கு உள்ளாகியுள்ளது. அன்னாரின் ஆன்மா சாந்தி அடைய சிதம்பரம் தீல்லை வாழ் சிவ நடராஜப் பெருமானை மனதார பிரார்த்தனை செய்து அவரது ஆன்மா ஈடேற்றத்திற்கு அனைவரும் பிரார்த்திப்போம் என்றுள்ளது. (எ-இ)



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 02 . 1943

மறைவு 01 . 05 . 2025



## சின்னையா தில்லைநாதன் (கந்தராசா)

சாவகச்சேரி கோயிற்குடியிருப்பை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா தில்லைநாதன் 01.05.2025 வியாழக்கிழமை இறைபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா-தங்கம்மா தம்பதியின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான எழுதுமட்டுவாழைச் சேர்ந்த பூபாலசிங்கம்-தங்கரத்தினம் தம்பதியின் அன்பு மருமகனும் தவமணியின் (தவம்) அன்புக் கணவரும் காலஞ்சென்ற சோமசுந்தரம்-கனகம்மா (பொன்னார்) வின் அன்புத் தம்பியும் திலீபன் (கனடா), மைதிலி (சுவிஸ்), காண்டீபன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தவக்குமார் (சுவிஸ்), தயாளினி (கனடா), கிருஷாந்தி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சகான், சகானா, மிதுலன், மிருஜா, கர்ணி, ஹம்ஸி ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.05.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சாவகச்சேரி.

திலீபன் (மகன்) : +141 6473 2926
மைதிலி (மகள்) : +417 8696 4071
காண்டீபன் (மகன்) : +447 76929 9363

தகவல்:
பிள்ளைகள்

(CS44903) V-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 25 . 08 . 1955

மறைவு 29 . 04 . 2025



## மாணிக்கம் சிவமூர்த்தி

**(உரிமையாளர் - வீடியோ கலாமினி, இராஜமாணிக்கம் கல்யாண மண்டபம் - அச்சுவேலி)**

அச்சுவேலி வடக்கு அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் சிவமூர்த்தி அவர்கள் கடந்த (29.04.2025) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - இராசமணி தம்பதியரின் அன்பு மகனும், அன்னராசா - காலஞ்சென்ற கண்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், மஞ்சுளாரஜனியின் அன்புக் கணவரும், கலைவாசன், கலைவாணி, கலைவரதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.05.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் :

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

குடும்பத்தினர்
077 197 2252

(CS/58149) J-1

# மரண அறிவித்தல்



தோற்றம் 30.04.1944

மறைவு 26.04.2025

## Dr செல்லத்துரை ஆனைமுகன்

காரைநகர் செம்பாட்டை பிறப்பிடமாகவும் பின்னர் New Zealand இல் மகப்பேற்று மருத்துவ நிபுணராகவும் அண்மைக்காலத்தில் பிரித்தானியாவில் வசித்து வந்த Dr செல்லத்துரை ஆனைமுகன் அவர்கள் கடந்த (26.04.2025) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான A.S ஆறுமுகம் அன்னம்மா தம்பதிகளின் மருமகனும், இந்திரா அவர்களின் அன்புக்கணவரும், Dr காண்டீபன் அவர்களின் பாசமிகு தந்தையும், Dr குர்டிப் அவர்களின் மாமனாரும் விக்ரம் அவர்களின் ஆருயிர் பேரனும் காலஞ்சென்ற கணேசபாக்கியம், கணேசன், பராசக்தி (பேபி), நாகரத்தினம் (மணி), கங்காதேவி, மகேஸ்வரி, ஞானேஸ்வரி காலஞ்சென்ற விக்கினேஸ்வரி, சிவனேஸ்வரி யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.05.2025) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: மனைவி, மகன், மருமகள், பேரன்

இந்திரா - 077 155 19620

S.A. Rajalingam
No: 50 New Chetty Street, Colombo - 13
077 777 7149

(CS/58148) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

தோல்வி என்பது ஒரு நபர் அல்ல ஒரு நிகழ்வு என்பதை நினைவில்கொள்ளுங்கள்.

—ஜிக் ஜிக்லர்—

# இன்னும் தொடரும் ஊடக அடக்குமுறை!

இன்று சர்வதேச ஊடக சுதந்திரதினம். உலகில் எத்தனையோ தினங்கள் கொண்டாட்டங்களுக்கு உரியவையாக உள்ளநிலையில், ஒருசில தினங்களே இன்னமும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டிய காலத்தேவைகருதி கடைப்பிடிக்கப்படுகின்றன. அவற்றில், 'ஊடக சுதந்திரதினமும்' ஒன்றாகும். ஏனெனில், ஊடக சுதந்திரத்தை நூறு வீதம் உறுதிப்படுத்திய நாடு என்று எந்தவொரு நாடும் இன்று உலகில் இல்லை. ஆகப்பழமையான ஜனநாயக நாடு என்று அறியப்படும் அமெரிக்காவில்கூட இன்று ஊடக அடக்குமுறைகள் தொடர்கின்றன. நாட்டுக்குநாடு அடக்குமுறையின் அளவுகள் வேறுபடுகின்றன. அவ்வளவே! இலங்கையைப் பொறுத்தவரை அரச பயங்கரவாதமும் அடக்குமுறைகளும் கடந்த அரசாங்கங்களின் காலத்தில் வகைதொகையின்றித் தொடர்ந்தன. ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டனர், காணாமலாக்கப்பட்டனர், மிலேச்சத்தனமாகத் தாக்கப்பட்டனர். வடக்குக்-கிழக்கில் மட்டும் 39 ஊடகவியலாளர்கள் இவ்வாறான துன்பங்களை எதிர்கொண்டுள்ளனர். ஊடகங்கள் நேரடி அச்சுறுத்தல்களை எதிர்கொண்டன. குறிப்பாக உதயன் இதுவரை 40க்கும் மேற்பட்ட தடவைகள் தாக்கப்பட்டது, எரிக்கப்பட்டது, 'இழுத்துமூடப்பட்டது. இந்த' ஊடகப் படுகொலைகளுக்கும் நெருக்குவாரங்களுக்கும்' ஒருசிலர்தான் காரணமா? இல்லவேயில்லை. குற்றத்துக்குக் காரணமாக இருந்த, குற்றத்தை இனங்கண்டு தண்டிக்காத கடந்த அரசாங்கங்கள் அனைத்தும் இதற்குப் பொறுப்புச் சொல்லியே ஆகவேண்டும்.

இலங்கையில் ஊடக சுதந்திரம் உறுதிப்படுத்தப்படும், ஊடகங்களுக்கு எதிராகக் கடந்த காலங்களில் இழைக்கப்பட்ட அநீதிகள் அனைத்துக்கும் நீதி வழங்கப்படும் என்றுகூறித்தான் ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. ஆனால், ஆட்சியைப் பொறுப்பெடுத்து ஆறு மாதங்கள் நிறைவடைகின்ற போதிலும் எந்தவொரு விடயத்துக்கும் நீதி வழங்கப்படவில்லை. ஒருசில ஊடகப்படுகொலைகள் தொடர்பில் விசாரணைகள் இடம்பெறுவதாகக் காண்பித்துக் கொண்டாலும், கடந்த சில வாரங்களாக அந்த விசாரணைகள் ஸ்தம்பித்து நிற்பதை அவதானிக்க முடிகின்றது. விசாரணைகள் தொடர்ச்சியாகவும் விரைவாகவும் மேற்கொள்ளப்பட்டு, ஊடகப் படுகொலைகளுக்கும், ஊடக அடக்குமுறைகளுக்கும் பின்னால் உள்ள காரணகர்த்தாக்கள் தண்டிக்கப்படவேண்டும்.

வடக்கு - கிழக்கில் இடம்பெற்ற ஊடகப் படுகொலைகள் மற்றும் ஊடகங்கள் மீதான தாக்குதல்கள் தொடர்பில் தீர்க்கமாக விசாரிப்போம் என்று, மார்ச் மாதம் 17ஆம் திகதி கிட்டுப்பூங்காவில் ஜனாதிபதி அநுர கலந்துகொண்ட பரப்புரையில் வைத்து கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர் அறிவித்திருந்தார். கடந்த அரசாங்கங்கள் கூறியதைப்போன்று வெறும் தேர்தல்கால அறிவிப்பாக இந்தக் கருத்துகள் அமைந்துவிடக்கூடாது. ஊடகங்கள் மீதான ஒவ்வொரு தாக்குதலும் நுணுக்கமாகவும், தீர்க்கமாகவும் விசாரிக்கப்பட்டு நீதி நிலைநாட்டப்படவேண்டும். ஜனநாயக விரோதிகளால் பெருந்துன்பங்களை அனுபவித்தவன் என்ற வகையில், இதை வலியுறுத்தும் உரிமை உதயனுக்குக் கனதியாக உள்ளது. எல்லாவற்றையும்விட, காணிவிடுவிப்பு, பௌத்தமயமாக்கல், அரசியற்கைதிகளின் விடுதலை தொடர்பான செய்திகளை அறிக்கையிடும் ஊடகவியலாளர்களுக்குத் தற்போதும் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுவருகின்றன. ஊடகவியலாளர்களைப் பாதுகாப்பதாகக் கூறிக்கொண்டு ஆட்சிக்குவந்த அரசாங்கத்தின் காலத்திலும், இத்தகைய அரச பயங்கரவாதம் மேலோங்குவது பெரும் அபத்தமே.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் ; advt@uthayan.com



# ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் மறுசீரமைப்பை விரைவுபடுத்துக!




சர்வதேச நாணயநிதியம் அழுத்தம்

**கொழும்பு, மே 3**

**ஸ்ரீலங்கன் ஏயார்லைன்ஸை மறுசீரமைக்கும் செயல்முறையை விரைவுபடுத்தவேண்டும் என்றும், அரசுக்குச் சொந்தமான ஏனைய நிறுவனங்கள் கூடுதல் முன்னேற்றம் காணவேண்டும் என்றும் சர்வதேச நாணயநிதியம் வலியுறுத்தியுள்ளது.**

மெய்நிகர் ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கருத்துத் தெரிவித்த இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் பணித்தலைவர் இவான் பாபஜெர்ஜியோ, ஸ்ரீலங்கன் ஏயார் லைன்ஸின் செயற்பாட்டு நம்பகத்தன்மையை மீட்டெடுப்பதற்கும் அதன் கடனைத் தீர்ப்பதற்கும் ஒரு நடுத்தர கால மூலோபாயத்திட்டத்தைத் தயாரிப்பதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ளார்.

தற்போதைய வரவு-செலவுத்திட்டத்தில் விமான நிறுவனத்தின் கடனில் சிலவற்றை அடைக்க 20 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்பது எங்களுக்குத் தெரியும். ஸ்ரீலங்கன் ஏயார்லைன்ஸ் அதன் சர்வதேச பத்திரங்களை மறுசீரமைக்க ஒரு நிதி ஆலோசகரையும் நியமித்துள்ளது என்பதையும் நாங்கள் அறிவோம்.

ஆனால் இந்த நிலுவையில் உள்ள அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வைப் பெறுவதற்கு வேகத்தை அதிகரிக்க வேண்டும் என்று நாங்கள் நினைக்கிறோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

## ஒருநாள் கடவுச்சீட்டுச் சேவை 3 நாள்கள் நிறுத்தம்

கொழும்பு, மே 3

ஒருநாள் சேவையில் கடவுச்சீட்டு பெற்றுக்கொள்வதற்காக 24 மணிநேரம் செயற்படும் சேவை எதிர்வரும் 5, 6 மற்றும் 7 ஆம் திகதிகளில் நிறுத்தப்படும் என பதில் குடிவரவு குடியகல்வு ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பதில் குடிவரவு குடியகல்வு ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)

## போதைப்பொருளுடன் வேட்பாளர் கைது

கொழும்பு,மே 3

2025 ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலில் பாணந்துறை நகரசபைக்குப் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் 13 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான மதிப்புள்ள போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார் என அலுபோமுல்ல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



சந்தேகநபரிடமிருந்து 102 கிராம் ஐஸ், 6 கிராமுக்கு மேற்பட்ட போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது. (ச-இ)

## பெண்ணொருவர் வெட்டிக்கொலை

கதிர்காமம், பேரகிரிகமப் பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய பெண் ஒருவர் நேற்றுமுன்தினம் வெட்டி படுகொலை செய்யப்பட்டுள்ளார். மூன்று பிள்ளைகளின் தாய் ஒருவரே இவ்வாறு கொடூரமாகக் கொலை செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக கதிர்காமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

## ஆவுஸ்திரேலியாவில் குடியேறுவோர் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, மே 3

அவுஸ்திரேலியாவில் 172,000 இலங்கையர்கள் வாழ்ந்து வருவதாக இறுதியாக மேற்கொள்ளப்பட்ட புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

2024 ஆம் ஆண்டு ஜூன் 30ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட சனத்தொகைக் கணக்கெடுப்பின் பிரகாரம் 27.2 மில்லியன் அவுஸ்திரேலிய சனத்தொகையில் 8.6 மில்லியன் மக்கள் வெளிநாடுகளிகருந்து குடியேறியவர்களாவர்.

கடந்த பத்து வருடங்களில் நேபாளம், இந்தியா, சீனா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளிருந்து அவுஸ்திரேலியாவில் குடியேறுவோரின் எண்ணிக்கை அதிகரித்துவருகிறது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-41-6)

நாளை 04.05.2025 ஞாயிற்றுக்கிழமை -பங்குனி- 26
சுபநேரம் : 08.56- 10.26
ராகுகாலம் : 04.26 - 05.56

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி நமதே ஊர் எமதே

# உள்ளூராட்சி சபை தேர்தல் - 2025
## யாழ்ப்பாண மாநகர சபை
### அபிவிருத்தித் தூரநோக்கு

சமூக, பொருளாதார மற்றும் சூழல் சார் தனித்துவப் பண்பாட்டுப் பாரம்பரியம் மேலோங்கிய வரலாற்றுச் செழுமைமிக்க கம்பீரமான உட்கட்டுமானம், உன்னதமான பன்முகப்படுத்தப்பட்ட சேவை வழங்கல் - அணுகல் ஊடான பன்மைத்துவப் பயனர் நேயம்மிக்க யாழ்ப்பாண மாநகரம்.



## தூய்மையான யாழ் மாநகரிற்கான அபிவிருத்தி இலக்குகள்

1. சிறுவர் பூங்காக்கள் மற்றும் திறந்த பொழுதுபோக்கு வெளிகளின் மேலாண்மை
2. குழந்தைகள் பராமரிப்பு நிலையம் மற்றும் சமமான முன்பள்ளிக் கட்டமைப்புருவாக்கம்
3. பாலூட்டும் தாய்மாரிற்கான அறைகள் மற்றும் சேவைபெறுவோர் தங்குமிட வசதிகளின் மேலாண்மை
4. பொதுக் கழிப்பறைத் தொகுதிகளின் நிர்மாணம் மற்றும் மாநகர சுகாதார மேலாண்மை
5. மாற்றுத்திறனாளர்களுக்கான நன்னிலை மைய உருவாக்கம் மற்றும் தொழிற்பாடு
6. சிரேஸ்ர பிரஜைகள் பகிர்வக உருவாக்கம் மற்றும் தொழிற்பாடு
7. நாளாந்த உடற்பயிற்சிக்கான பிரதேசங்களின் அபிவிருத்தி
8. மாநகரில் தரமானதும் பாதுகாப்பானதுமான உணவு வழங்கலிற்கான நிலைய உருவாக்கம்
9. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பூங்கா உருவாக்கம்
10. இலத்திரனியல் மயப்படுத்தப்பட்ட மாநகர நிர்வாக சேவைகள் மற்றும் நூலக சேவைகள்
11. நிரந்தர, தற்காலிக வதிவிடங்கள் மற்றும் சேவை நிலையங்களிற்கான விரைந்த குடிநீர்வழங்கல்
12. ஒருங்கிணைந்த கழிவு சேகரிப்பு மற்றும் மீள்சுழற்சி
13. பொதுச் சந்தைகளுக்கான உட்கட்டுமான மற்றும் சேவை மேலாண்மை
14. ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசம்சார் பசுமை நகர வடிவமைப்பு, நெறிப்படுத்தல் மற்றும் மேலாண்மை
15. கொத்தணி அடிப்படையிலான மையப்படுத்தப்பட்ட மலசலகூடக் கழிவு சேகரிப்பு மற்றும் சுத்திகரிப்பு
16. ஒருங்கிணைந்த போக்குவரத்து, பாதசாரிகளுக்குமான வீதிமேம்பாடு மற்றும் பேரூந்து நிலைய விருத்தி
17. பொது வாகனத் தரிப்பிட அபிவிருத்தி மற்றும் சாலையோர வாகன நெரிசல் மேலாண்மை
18. திறந்த மற்றும் உள்ளக விளையாட்டு மற்றும் உடற்பயிற்சிக்கூடங்களின் பகல் – இரவுச் சேவை
19. மாநகர விரிவாக்கம் மற்றும் மைய நகரின் மேற்கு நோக்கிய கட்டுமான மற்றும் சேவைத்துறை வளர்ச்சி
20. பண்பாட்டு அடையாளங்களின் பாதுகாப்பு, மீளுருவாக்கம் மற்றும் மேலாண்மை
21. மாநகர தொழில்முனைவாளர்களிற்கான தொழிலூக்கப் பட்டறை உருவாக்கம் மற்றும் தொழிற்பாடு
22. கோட்டைச் சுற்றுவட்ட அபிவிருத்தியும் தாவரப்போர்வை அதிகரிப்பு மற்றும் பாதுகாப்பு மேலாண்மை
23. உள்ளக மற்றும் புறநகர குறை பயன்பாட்டு நிலங்களின் ஒருங்கிணைந்த பயன்பாட்டு மேலாண்மை
24. கரையோரவலய அபிவிருத்தி மற்றும் மேலாண்மை
25. மாநகர இடர் முகாமைத்துவத்திற்கான சமூகமட்ட மனிதவளக் கட்டமைப்புருவாக்கம்
26. மரணாதைய சங்க உருவாக்கம், மின்னியல் சுடுகாடு மற்றும் இடுகாட்டு மேலாண்மை
27. மாநகர மக்கள் மன்ற உருவாக்கம் மற்றும் தொழிற்பாடு
28. மாநகர கட்டடப் புனராவர்த்தனம் மற்றும் நவீன சந்தைக் கட்டடத் தொகுதி உருவாக்கம்
29. சமுதாய மட்டத்திலான வரலாற்று, சூழல், பண்பாட்டு, கடலோரச் சுற்றுலாத்துறை மேம்பாடு
30. யாழ்ப்பாண இளையோர் பண்பாட்டுச் சங்கமம் மற்றும் புத்தாக்க மறுமலர்ச்சி மாநாட்டு ஒழுங்கு
31. மாநகர அபிவிருத்தியில் புதுப்பிக்கக்கூடிய வளப் பயன்பாடு




www.npp.lk NPP Jaffna NPP SriLanka

தேசிய மக்கள் சக்தி
ජාතික ජන බලවේගය
JATHIKA JANA BALAWEGAYA (NPP)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்திச் செயற்பாட்டுப் பயணத்தில்

குளங்கள், அவற்றை இணைக்கும் வாய்க்கால்கள், மேலதிகநீர் கடலோடு கலக்கும் இடங்கள் என்பவற்றுக்கான முழுமையான வலைப்பின்னல் கட்டமைப்பை மீளமைப்புச்செய்து வாராந்த பராமரிப்பை மேற்கொள்வதோடு, வெள்ளநீரினை சேமிக்கக்கூடிய வகையிலான நகர உட்கட்டுமான வடிவமைப்பை மேற்கொண்டு அதீத வெள்ளநீரைக் கடலுடன் உடனடியாகச் சேர்ப்பிப்பதற்கான நீர்ப்பாய்ச்சல் நிலையங்களை உருவாக்குதல். சூழல் நேயம்மிக்க அபிவிருத்திக்காக இலத்திரனியல் மயப்படுத்தப்பட்ட மாநகர நிர்வாக சேவைகள் மற்றும் நூலக சேவைகள்.





மாநகரில் வட்டார அடிப்படையில் கழிவுகளைத் தரம்பிரித்துச் சேமித்தல், நிகழ்ச்சித்திட்டமிடப்பட்ட ரீதியில் சேமித்த கழிவுகளை இடம்மாற்றல், சேதன உரம்தயாரித்தல், பிரிகையாக்கிப் பண்ணைகளிற்கு விநியோகித்தல், நிலநிரப்புகை செய்தல் மற்றும் மீள்சுழற்சிக்குட்படுத்துதல் போன்றவற்றினை மேற்கொண்டு கழிவினை இயலுமானவரை செல்வமாக்குதல். சுகாதார மற்றும் அபாயக் கழிவுகளை எரியூட்டுவதற்கான பொறிகளைக் கட்டமைத்துத் தொழிற்படுத்துதல். மாநகர அபிவிருத்தியில் புதுப்பிக்கக்கூடிய வளப் பயன்பாடு. மாநகர இடர் முகாமைத்துவத்திற்கான சமூகமட்ட மனிதவளக் கட்டமைப்புருவாக்கம்.

வட்டாரங்களில் கொத்தணி முறையில் வீடுகள் மற்றும் பொது இடங்களின் மலசலகூடக் கழிவுகளையும், தொழிற்சாலை மற்றும் வர்த்தகநிலையக் கழிவுநீரையும் வலையமைப்பினூடாகச் சேமித்துச் சுத்திகரிக்கும் பொறிமுறையை உருவாக்கிச் சுகாதார மேலாண்மையை உறுதிப்படுத்துவதோடு தற்காலிக மலசலகூடக் கட்டமைப்புகளை உருவாக்குவதனூடாகப் பாரிய மக்கள் கூட்டங்களின்போது மக்களின் சுகாதாரத் தேவையை வினைத்திறனாகப் பூர்த்திசெய்தல். பொதுச் சந்தைகளுக்கான உட்கட்டுமான மற்றும் சேவை மேலாண்மை. உள்ளக மற்றும் புறநகர குறைப்பயன்பாட்டு நிலங்களின் ஒருங்கிணைந்த பயன்பாட்டு மேலாண்மை.





இளம் தொழில்முனைவாளர்கள் வர்த்தகத் திட்டங்களை வளப்பங்களிப்பாளர்கள் மற்றும் அரசமுதலீட்டுக் கட்டமைப்புடன் கலந்தாலோசித்துப் புதிய தொழில்களை ஆரம்பிப்பதற்கான கலந்துரையாடல்களை மேற்கொள்ள இடமளிப்பதோடு, மாநகர இளையோருக்கான புத்தாக்க முயற்சிகளைக் காட்சிப்படுத்தும் மாநாட்டோடு கூடவே பண்பாட்டுப் பெருநிகழ்வுகளை அரங்கேற்ற ஏதுவாக இளையோர் சங்கமம் ஒன்றை வருடாந்தம் நடாத்துதல். தொழில்நுட்பப் பூங்காக்களைப் பிரதேசவாரியாக மக்கள் தொகைக்கேற்றாற்போல நிறுவுதல். மாநகர மக்கள் மன்றத்தை வட்டாரவாரியான மக்கள் பங்கேற்புடன் அமைத்தல்.

கோட்டைச் சுற்றுவட்ட அபிவிருத்தி, தாவரப்போர்வை அதிகரிப்பு மற்றும் பாதுகாப்பு. உள்ளக, புறநகர குறைப்பயன்பாட்டு நிலங்களின் ஒருங்கிணைந்த பயன்பாடு. கரையோரவலய அபிவிருத்தி மற்றும் மேலாண்மை. பண்பாட்டு அடையாளங்களின் பாதுகாப்பு, மீளுருவாக்கம். ஒருங்கிணைந்த போக்குவரத்து, பாதசாரிகள் வீதிமேம்பாடு மற்றும் பேருந்து நிலைய விருத்தி. பொது வாகனத் தரிப்பிட அபிவிருத்தி மற்றும் சாலையோர வாகன நெரிசல் மேலாண்மை. மாநகர விரிவாக்கம் மற்றும் மைய நகரின் மேற்கு நோக்கிய வளர்ச்சி. சமுதாய மட்டத்திலான வரலாற்று, சூழல், பண்பாட்டு, கடலோரச் சுற்றுலாத்துறை மேம்பாடு.





தாவரப் போர்வை பரந்த, விளையாட்டு அம்சங்கள் இணைந்த, இளைப்பாறும் வசதிகள் கொண்ட, கழிப்பறைகளை உள்ளடக்கிய பூங்காக்களை மீள்கட்டமைத்தல். இரண்டு வயது நிரம்பிய குழந்தைகளைப் பாதுகாப்பான சூழலில் தங்கவைத்துப் பெற்றோர் சேவைகளில் வினைத்திறனாக ஈடுபட ஏதுவாகச் சமூக மற்றும் சுகாதாரப் பாதுகாப்புடன் கூடிய குழந்தைப் பராமரிப்பு நிலையங்களை அமைத்தல். குழந்தைகளின் மகிழ்வூட்டல் மற்றும் முன்பள்ளிக் கற்றல் செயற்பாடுகளில் ஒரே வகையான உட்கட்டமைப்பு வசதிகளைக் கட்டமைப்பதோடு முன்பள்ளி ஆசிரியர்களின் பொருளாதாரச் சவால்களை இழிவளவாக்குதல்.

சேவைகளைப் பெற்றுக்கொள்ள வருகின்ற பயனர்களிற்கான தற்காலிக தங்குமிடங்களை வழங்குவதோடு பொதுச் சேவை மையங்களில் பொது மலசல கூடங்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களிற்கான அறைகளைக் கட்டமைப்பதோடு, மாற்றுத்திறன்உடைய சகோதர சகோதரிகள் தமது கற்றல், திறன் மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்புத் தேவைகளை அணுகிப் பெற்றுக்கொள்ள ஏதுவாக நன்னிலைமையம் ஒன்றை அவர்களிற்கான விசேட கருவிகளின் உள்ளடக்கத்துடன் ஏற்படுத்துவதோடு மாநகரின் சிரேஸ்ர பிரஜைகள் ஒன்றாகக் கூடி இளைப்பாறி அனுபவங்களைப் பகிர்வதற்கான வெளிகளைக் கட்டமைத்தல்.







நாளாந்தம் நகர வதிவிடவாளர்கள் நடைப்பயிற்சியைச் சுதந்திரமாக மேற்கொள்ளக்கூடிய நட்புறவான கட்டமைப்புகளை உருவாக்குவதோடு, உள்ளக மற்றும் திறந்த விளையாட்டுப் பயிற்சிகளை மேற்கொள்ளவும், விளையாட்டுப் போட்டிகளை நடாத்தவும், உடற்பயிற்சிகளை மேற்கொள்ளவும் ஏதுவாக மாநகர விளையாட்டு மைதானங்களைக் காலை 05.00 மணிமுதல் இரவு 10.00 மணிவரை செயற்பாட்டுக்குட்படுத்த வசதிகள் ஏற்படுத்திக்கொடுத்தல். நவீன சந்தைக் கட்டடத்தொகுதியைப் புனரமைப்பதோடு, கேள்வியைப் பூர்த்திசெய்யும் வகையில் புதிய நவீன சந்தைக் கட்டடத் தொகுதியினை நகர மையத்தில் நிறுவுதல்.

> ஊழலற்ற சபை

> இன, மத, சாதி பேதமற்ற ஆட்சி

> முழுமையான அபிவிருத்திக்கான பாதையில்

வெற்றி நமதே
ஊர் எமதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஊடகச் சுதந்திரத்தை பாதுகாக்கவேண்டும்

இன்று உலக பத்திரிகை சுதந்திர நாள். அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.

■ பால. பகீந்திரன்
ஆசிரியர் தொடர்பாடல் ஊடகக்கலை
மன்னார் அடம்பன் மத்திய மகாவித்தியாலயம்.

உலக பத்திரிகை சுதந்திரதினம், மே 3 ஆம் நாளான இன்று உலகெங்கும் கொண்டாடப்பட்டு வருகிறது. எப்போதுமே பத்திரிகையாளர்கள்தான் பெரும்பாலான நாடுகளில் மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத மக்கள் பிரதிநிதிகளாகவே செயலாற்றி வருகின்றனர். பத்திரிகைச் சுதந்திரத்தைப் பரப்பும்வகையில், பேச்சுரிமைக்கான சுதந்திரத்தை உலக நாடுகளின் அரசுகளுக்கு நினைவுபடுத்தும்வகையில் ஐக்கிய நாடுகள் சபையினால் இந்த நாள் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

1986 ஆம் ஆண்டு டிசெம்பர் 17 இல் கொலம்பியப் பத்திரிகையாளரான கிலெர்மோ கானோ இசாசா அவரது அலுவலகம் முன்பாக வைத்துப் படுகொலை செய்யப்பட்டார். இவரது படுகொலையின் பின்னரே பத்திரிகை சுதந்திரம் தொடர்பான பேச்சு உலகம் முழுவதும் வலுப்பெற்றது. இதே வேளை யுனெஸ்கோ நிறுவனம், "சுதந்திரமான ஊடகத்துறையை ஊக்குவித்தல்" எனும் தொனிப் பொருளில் கருத்தரங்கு ஒன்றைக் கடந்த 1991 ஆம் ஆண்டு ஏப்ரல் 29 முதல் மே 3 ஆம் திகதி வரை நமீபியாவின் வைண்ட் ஹோக் நகரில் நடத்தியது. இக்கருத்தரங்கில் ஆபிரிக்க ஊடகவியலாளர்களால் பத்திரிகை சுதந்திரத்துக்காக "வைண்ட் ஹோக் பிரகடனம்" தயாரிக்கப்பட்டது. இப்பிரகடனம் 1991 ஆம் ஆண்டில் நடந்த யுனெஸ்கோ பொதுக்கூட்டத்தின் 26 ஆவது அமர்வில் அங்கீகரிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து உலக பத்திரிகையாளர்களின் தொடர் முன்னெடுப்புகள் காரணமாக 1993 ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக் கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் ஆண்டுதோறும் மே 3 ஆம் திகதி உலக பத்திரிகை சுதந்திரதினம் முன்னெடுக்கப்படுகிறது.

யுனெஸ்கோ அமைப்பானது வருடந்தோறும் ஊடக சுதந்திர தினத்தை முன்னிட்டு ஊடகவியலாளர்கள், ஊடக சுதந்திர அமைப்புகள் மற்றும் ஐ.நா. முகவர்கள் பங்குபற்றும் மாநாட்டை ஒவ்வொரு தொனிப் பொருளில் நடத்துகிறது. இலங்கையில் அம்மாநாடு 2006 ஆம் ஆண்டு நடத்தப்பட்டது. இந்த நாளில் ஊடக சுதந்திரத்துக்காகப் பங்களிப்பு செய்யும் ஒருவருக்கு ஆண்டுதோறும் யுனெஸ்கோ நிறுவனத்தினால் "கிலெர்மோ கானோ உலக பத்திரிகை சுதந்திர விருது" வழங்கிக் கௌரவிக்கப்படுகிறது. இவரது நினைவாக உலக அமைதிக்காகவும் பேச்சுச் சுதந்திரத்திற்காகவும் மற்றும் பத்திரிகை தர்மத்தினூடாகப் பல இன்னல்களைக் கடந்து போராடிய பத்திரிகை எழுத்தாளர் ஒருவருக்கு 25,000 டொலர் பெறுமதியான பரிசு வழங்கப்படுகின்றது.

இந்த ஆண்டு 31 ஆவது உலக ஊடக சுதந்திர தினம் கடைப்பிடிக்கப்படுகின்றது. இந்த ஆண்டுக்கான இத்தினத்தின் கருப்பொருளாக "துணிச்சலான புதிய உலகில் அறிக்கையிடல், பத்திரிகை சுதந்திரம் மற்றும் ஊடகங்களில் செயற்கை நுண்ணறிவின் தாக்கம்" என்பதாகும். தற்காலத்தில் ஊடகத்துறையில் செயற்கை நுண்ணறிவின் விரைவான வளர்ச்சி பத்திரிகை ஊடகம் மற்றும் பத்திரிகைச் சுதந்திரத்தைப் பெரிய வழிகளில் மாற்றுகிறது. ஊடகத்துறையில் சுதந்திரமான மற்றும் பன்முகத்துவ ஊடகங்களின் கொள்கைகள் முக்கியமானதாக இருந்தாலும் தகவல் சேகரிப்பு, செயலாக்கம் மற்றும் பரப்புதல் ஆகியவற்றில் செயற்கை நுண்ணறிவின் தாக்கம் அதிகமாகியுள்ளது. இலங்கையின் எதிர்கால பத்திரிகைத் துறையில் பார்வையாளர்களும் வாசகர்களும் அதிகாரம் உடையவர்களாக இருப்பர். இருந்த போதிலும் செய்தித்தாள்கள் தீவின் அனைத்து பகுதிகளிலும் பெருமளவில் வாசிக்கப்படுகின்றன. இலங்கையில் பத்திரிகை சுதந்திரமானது பல தசாப்தங்களாக கொடூரமான காலங்களில் இரக்கமற்ற முறையில் முன்னெடுக்கப்பட்ட தடைகள் வரை மிகத் தெளிவாக விளக்குகிறது. உலக ஊடக சுதந்திர தினமானது ஜனநாயகம், வெளிப்படைத் தன்மை மற்றும் மனித உரிமைகளை நிலைநாட்டுவதில் முக்கிய பங்கு வகித்தாலும் இலங்கையில் ஊடகவியலாளர்கள் சந்திக்கும் அச்சுறுத்தல்கள், தொல்லைகள் மற்றும் வன்முறை ஆகியவற்றைச் சுட்டிக்காட்டி அவர்களின் வலுவான பாதுகாப்பு வலியுறுத்தப்படுகிறது.



இலங்கை பத்திரிகை ஊடகத்துறையினை எடுத்துக்கொண்டால் பல ஊடகவியலாளர்கள் போர்க் காலத்தில் கொல்லப்பட்டுள்ளனர். குறிப்பாக தமிழ் ஊடகத்துறையில் பணியாற்றிய மயில்வாகனம் நிமலராஜன், சுப்பிரமணியம் சுகிர்தராஜா, தர்மரட்ணம் சிவராம், சின்னத்தம்பி சிவமகராஜா, சகாதேவன் நிலக்ஷன் ஆகிய தமிழ் ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட இன்னும் பல ஊடகவியலாளர்கள் படுகொலைசெய்யப்பட்டனர். ஊடகப் பணியாளர்கள் தாக்கப்பட்டும் ஊடக நிறுவனங் கள் மீதும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எனினும் இவர்களின் கொலைக்கான நீதி நிலைநாட்டப்படவில்லை. எனவே இன்றைய பத்திரிகை சுதந்திர நாளில் ஊடகத்துறைக்கு எதிராக இடம்பெற்ற வன்முறைக்கு உரிய நீதி வழங்கப்பட வேண்டும். ■

## 'போர்ட்சிற்றி'யைக் காட்டியே மக்களை இழுத்த அரசு!

யாழ்ப்பாணம், மே 3

கொழும்பு துறைமுகநகரைக் காண்பிக்கின்றோம் எனக் கூறியே காலிமுகத்திடல் கூட்டத்துக்கு தேசிய மக்கள் சக்தி மக்களைத் திரட்டியுள்ளது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி தெரிவித்துள்ளது.

நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இதுதொடர்பில் மொட்டுக்கட்சி உறுப்பினர் சாகர காரியவசம் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கப் பலத்தைப் பயன்படுத்தி, பல கோடிகளைச் செலவளித்து, நாட்டில் பல பகுதிகளில் இருந்தும், போர்ட் சிற்றியைக் காட்டுகின்றோம் என மக்களை அழைத்து வந்தே கோல்பேஸை ஆளுங்கட்சியினர் நிரப்பியுள்ளனர். ஆனால் அரசாங்க பலம் இல்லாமல், எதிரணியில் இருந்தபோதே கோல்பேஸில் மக்கள் கூட்டத்தை நிரப்பிய கட்சிதான் மொட்டுக்கட்சியாகும். அந்தப் பெருமை மஹிந்த ராஜபக்சவையே சாரும் - என்றார். (ச-44)



## தமிழர்கள் ஒருபோதும் சோரம்போகக்கூடாது!

### *வவுனியாவில் துண்டுப்பிரசுரம்*

வவுனியா, மே 3

எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத்தேர்தலில் கொள்கை பற்றுள்ள தமிழ்த்தேசியக் கட்சிகளுக்கு வாக்களிக்குமாறு தமிழ்த்தேசிய செயற்பாட்டுக் குழுமம் தெரிவித்துள்ளது.

வவுனியா நகரில் நேற்று துண்டுப்பிரசுரங்களை விநியோகித்து இந்த விழிப்புணர்வு முன்னெடுக்கப்பட்டது. வலிசுமந்து, உடைமையிழந்து, உறவையிழந்து அனைத்துலக நீதிக்காய் அல்லும் பகலும் உழைக்கும் இவ்வேளையிலே பகட்டுக்காகவும், பம்மாத்து வார்த்தைகளுக்காகவும், பற்றுள்ள தமிழினம் சோரம்போகலாமா..? எனவே கொள்கைப்பற்றுள்ள தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு மட்டும் தமிழர்களாக வாக்களிப்போம் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர். (ச-110)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜே.வி.பி.க்கு எதிரானோரை போட்டுத்தள்ளும் அரசு?

## பெரமுன குற்றச்சாட்டு

கொழும்பு, மே 3

ஜே.வி.பி.யினருக்கு எதிரானவர்களைக் கொலை செய்வதற்குரிய முயற்சி இடம்பெறுகின்றதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர்மேலும் தெரிவிக்கையில் நாட்டில் கொலைச்சம்பவங்கள் கோலோச்சியுள்ளன. டான் பிரியசாத்தும் கொல்லப்பட்டார். அரசாங்கத்தக்கு எதிரான ஜே.வி.பி.க்கு அச்சுறுத்தலாக அமையக்கூடியவர்களை கொலைசெய்வதற்குரிய முயற்சி இடம்பெறுகின்றது.

இந்தக் கொலைமுயற்சிக்கு பாதாளக்குழுவின் உதவி பெறப்படுகின்றது என்பது எமக்கு விளங்குகின்றது. இது பாரதூரமான விடயமாகும். எனவே, சட்டத்தின் ஆட்சியை மதிக்கும் மக்கள் இதற்கு எதிராகக் குரல் எழுப்பவேண்டும்- என்றார். (ச-44)



# சிறுவர்கள் மத்தியில் இன்புளுவென்ஸா!

கொழும்பு,மே 3

நாட்டில் சிறுவர்கள் மத்தியில் இன்புளுவென்ஸா வைரஸ் தொற்றுப்பரவல் அதிகரித்துள்ளதாக கொழும்பு சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையின் மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக இந்த நோய்த் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

காய்ச்சல், இருமல், வாந்தி மற்றும் தடிமன் உள்ளிட்டவை இதற்கான அறிகுறிகள்.

குறித்த வைரஸ் தொற்று ஏனையோருக்கு பரவும் அபாயம் காணப்படுவதால் தொற்று இனங்காணப்பட்ட நபர் மிகுந்த அவதானத்துடன் செயற்படவேண்டும். வைரஸ் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக கைகளை கழுவி சுத்தமாக வைத்திருக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)

# தேர்தல் அலுவலர்களுக்கான முன்னாயத்தச் செயலமர்வு!

யாழ்ப்பாணம், மே 3

உள்ளூராட்சிசபைத் தேர்தலை முன்னிட்டு இணைப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கான முன்னாயத்தச் செயலமர்வு நேற்று வெள்ளிக்கிழமை யாழ்.மாவட்டச் செயலர் அலுவலகத்தில் யாழ்.மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரும், மாவட்டப் பதில் செயலருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது உள்ளூராட்சிசபைத் தேர்தல் தொடர்பாகப் பொறுப்பாக நியமிக்கப்பட்ட இணைப்புத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கான அறிவுறுத்தல்கள் மற்றும் கடமைகள் பொறுப்புக்கள் தொடர்பாக மாவட்டப் பிரதித் தேர்தல் ஆணையாளர் இ. சசீலனால் விளக்கமளிக்கப்பட்டது. (ச-66)

# தமிழ்மக்களுக்காக குரல்கொடுத்தவர்

## நல்லை ஆதீனக்குருமுதல்வர் மறைவுக்கு ஆளுநர் இரங்கல்

யாழ்ப்பாணம், மே 3

போர்க்காலத்திலும் சரி, அதற்குப் பின்னரான காலங்களிலும் சரி யாழ்ப்பாணத்தைநோக்கி வருகின்ற இராஜதந்திரிகள், அரசியல்வாதிகள் என்று எவரும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளைச் சந்திக்காமல் செல்வதில்லை. எமது மக்களின் உண்மை நிலையை எடுத்துக் கூறுவதற்கு அவர் என்றும் பின்நின்ற தில்லை. சமயத் தலைவராகவிருந்த போதும் ஒட்டுமொத்த தமிழ்மக்களுக்காகவும் குரல் கொடுத்துவந்த பெருந்தகை என வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் புகழாரம் சூட்டியுள்ளார்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பரிபூரணமடைந்த நிலையில் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியிலேயே வடக்கு மாகாண ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்துசமயத்தின் வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்து வாழ்ந்த அவரை மிக நீண்டகாலமாக நான் அறிவேன். நல்லூரில் அமைந்துள்ள நல்லை ஆதீனம் ஊடாக இந்து சமயத்தை வளர்ப்பதற்காகப் பல நிகழ்வுகளை நடத்திவந்துள்ளார். அவற்றுக்கு மேலாகச் சிறுவர்களிடத்தே இந்து சமயத்தின் மீதான ஈர்ப்பை அதிகரிக்கவும், இந்துசமய அறநெறிகளைப் போதிக்கவும் பல விடயங்களை அவர் முன்னெடுத்திருந்தார் என்பது மிக முக்கியமானது.

அவர் ஆற்றிய பணிகளுக்காக என்றும் எம் மக்களால் நினைவுகூரப்படுவார். அவருக்கு வடக்கு மாகாண மக்கள் சார்பாக ஆத்ம வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன் - என்றார். (ச-66)

# நல்லை ஆதீனத்தின் மறைவு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பு

## இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் இரங்கல்

யாழ்ப்பாணம், மே 3

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் குருமுதல்வர், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் விண்ணுலகு எய்தியுள்ளமை இந்து சமயத்துக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது.

சைவத்தமிழ்ச்சமூகத்தின் ஆன்மிகமுன்னேற்றத்துக்காகவும், சைவசமயத்தின் பரம்பலுக்காகவும், கல்வி, கலை மற்றும் சமூக நலனுக்காகவும் தன்னையே அர்ப்பணித்துத் தொண்டாற்றிய பெருந்தகையாளன்.

ஏழைமக்களின் வாழ்வாதாரத்துக்கு அர்ப்பணிப்பான பல சேவைகள் ஆற்றியவர். தன்னிழலிலே பல பிள்ளைகள் இளைப்பாற வழிசமைத்தவர். சமய, சமூக நல்லிணக்கத் தோடு நாட்டுமக்கள் வாழவேண்டும் என்ற எண்ணத்தோடு செயற்பட்டவர்.

அவரது திடமான ஆன்மிகப் பார்வையும், பணிவும், பல தலைமுறைகளுக்கு முன்மாதிரியாக இருந்தது. ஈடிணையற்ற இந்த ஆன்மிகச் சொத்தினை நாம் இழந்துநிற்பது நம் தவக்குறைவன்றி வேறில்லை என்றும் அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச)





## கெடுபிடிகளுக்கு மத்தியில்

# பசுமை இயக்கத்தின் மேதினக் கூட்டம்!

யாழ்ப்பாணம், மே 3

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் செம்பசுமை மேதினப் பொதுக்கூட்டம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நல்லூர் இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் எழுச்சியுடன் நடைபெற்றது.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் இணைப்பாளர் நா. பார்த்தீபன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொன்னுத்துரை ஐங்கரநேசன் கலந்துகொண்டு தொடக்கவுரை ஆற்றினார். தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சமூக அரசியற் செயற்பாட்டாளர் க. அருந்தவபாலன், தமிழ்த்தேசியக் கட்சியின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி ந.ஸ்ரீகாந்தா, ஜனநாயகத் தமிழரசுக் கட்சியின் தலைவரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான கே.வி.தவராசா ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர்.

கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் திடீரென அரங்கிற்குள் நுழைந்த அதிரடிப்படையினர், மோப்பநாய் சகிதம் மண்டபத்தை அங்குலம் அங்குலமாகச் சோதனையிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2024 க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள்



## யாழ்.மாவட்டத்தில் ஹென்றியரசர் மாணவன் வணிகப்பிரிவில் மூன்றாமிடம்

யாழ்ப்பாணம், மே 3
2024 ஆம் ஆண்டு உயர்தரப்பரீட்சையில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மாணவன் குணராசா பிரகாசன் வணிகத்துறையில் 3ஏ சித்திகளைப் பெற்று யாழ். மாவட்ட ரீதியில் 3 ஆவது இடத்தைப் பெற்று சாதனைபடைத்துள்ளார். (ச-25, 27)

## சாவகச்சேரி இந்துக்கல்லூரி

விஞ்ஞானப்பிரிவு
த.டிலக்சன் 3ஏ, ந.ஆரதி 3ஏ, க.கிருஷிகா 3ஏ, க.வர்ஜிதா 2ஏ பி, சி.சாருகா 2ஏ பி, ம.பதுர்ஷனா 2ஏ சி, சு.சங்கீர்த்தனா 2ஏ சி, கோ.திலக்சிதா ஏ 2பி, ஜெ.விகாஷினி ஏபிசி, வி.பானுஜா ஏபிசி

கணிதப்பிரிவு
ஜெ.சாகித்தியன் 3ஏ, சி. நிலக்சன் 3ஏ, த.தர்சிகன் 2ஏ பி, மு.ஆகீஷ் 2ஏ பி, ஜெ.சாருமதி 2ஏ பி, சி. கிருஷான் ஏபிசி, நி.மிதுசகன் ஏபிசி

வணிகப்பிரிவு
த.முகிந்தன் 2ஏ பி, தி.கர்சனா 2ஏ பி, த.கஜானி 2ஏ பி, சி.டெலக்சனா ஏ 2பி, ம.மதுரா ஏ 2பி, ம.கபிதா ஏபிசி

பொறியியல் தொழிநுட்பவியல்
சி. பிரணவன் 2ஏ பி,
ஜெ.சியாமலன் ஏ 2பி

உயிர்முறைமைகள் தொழிநுட்பவியல்
வி.தர்சனா 2பி சி
(25, 28)



## உ/தரப் பரீட்சைப் பெறுபேறு
## தென்மராட்சி வலயத்தில் 74 வீதமானோர் சித்தி

யாழ்ப்பாணம், மே 3
தென்மராட்சிக் கல்வி வலயத்துக்குட்பட்ட உயர்தரப் பாடசாலைகளில் 614 மாணவர்கள் உயர்தரப்பரீட்சையில் தோற்றியுள்ள நிலையில் 3ஏ சித்திபெற்ற 38 மாணவர்கள் உட்பட மொத்தமாக 455 மாணவர்கள் சித்தியடைந்ததன் மூலம் தென்மராட்சிக் கல்வி வலயம் 74.10 சித்தி வீதத்தைப் பெற்றுள்ளது.
அதற்கமைய சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் 20 மாணவர்களும், மீசாலை வீரசிங்கம் வித்தியாலயத்தில் 10 மாணவர்களும், வரணி மத்தியகல்லூரியில் 5 மாணவர்களும், சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் ஒரு மாணவரும் மகளிர் கல்லூரியில் ஒரு மாணவரும் கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.யில் ஒரு மாணவரும் 3ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர்.

## சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

கலைப்பிரிவு
அ.கஜானா 3ஏ, சா.கம்சி ஏ 2பி, பு.சாருஜன் ஏ 2சி, அ.யதுசனா 2பி சி, கி.மிதுலா 2பி சி, ர.அஸ்வினி 2பி எஸ்

வர்த்தகப்பிரிவு
சு.வினுசா 2பி சி (25, 159)

## சாதனைகளை ஈட்ட கடும் முயற்சி தேவை

### வணிகப்பிரிவில் முதலிடம்பெற்ற மாணவன் வாரணன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 1
சட்ட வல்லுனர் ஆவதே எனது கனவு. அதற்கு ஏற்ப எனது பயணத்தை ஆரம்பிக்கவுள்ளேன். சாதனைக்கு கடுமையான முயற்சி அவசியம். உயர்தரத்தில் கற்கும் இரண்டு வருட கல்விதான் வாழ்க்கையை தீர்மானிக்கும் என்று 2024 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் ｒவணிகப் பிரிவில் யாழ். மாவட்டத்தில் முதலிடம் பெற்ற இந்துக் கல்லூரி மாணவன் விஜயசுந்தரம் தெரிவித்துள்ளார்.
க.பொ.த உயர்தரம் கற்கும் போது நான் பல சவால்களை எதிர்நோக்கினேன். அந்த சவால்களை நிவர்த்தி செய்த எனது பெற்றோருக்கு முதற்கண் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். சட்ட வல்லுனர் ஆவதே எனது கனவு. சாதனைக்கு கடுமையான முயற்சி அவசியம். உயர்தரத்தில் கற்கும் இரண்டு வருட கல்விதான் வாழ்க்கையை தீர்மானிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச- 25,27 )

## பல்கலைக்குத் தெரிவாகிய மாற்றுத்திறனாளி மாணவன்



முல்லைத்தீவு, மே 3
செவிப்புலன் மற்றும், பேச்சுத்திறனற்ற மாணவன் ஒருவர் இம்முறை கல்விப்பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகி சாதித்துக்காட்டியுள்ளார்.
முல்லைத்தீவு - வள்ளிபுனம் பகுதியில் அமைந்துள்ள இனியவாழ்வு இல்லத்தில் கல்விகற்ற ஜெயபாலன் பூந்தமிழ் என்ற மாணவனே இவ்வாறு சாதனையீட்டியுள்ளார். உயர்தரப்பரீட்சையில் கலைப்பிரிவில் தோற்றிய ஜெயபாலன் பூந்தமிழ் சித்திரப் பாடத்தில் சி, புவியியல் பாடத்தில் எஸ், மனைப்பொருளியலில் எஸ் சித்திபெற்றதுடன் பொதுஅறிவுப் பரீட்சையில் 38 புள்ளிகளையும் பெற்று பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகியுள்ளார். (ச-33)

## ‘ஞானச்சுடர் - 328’ வெளியானது

யாழ்ப்பாணம், மே 3
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டுப் பேரவையானது, தனது “ஞானச்சுடர் 328 ஆவது மலரை” வெளியிட்டுள்ளது. பு.கதிரித்தம்பி, பூ.சோதிநாதன், மு.செல்லத்தம்பி, வி.செல்வரத்தினம், ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம், கே.எஸ்.சிவஞானராஜா, செ.பாலச்சந்திரன், திருமதி ஜெ.இராஜேஸ்வரி, திருமதி பா.சிவனேஸ்வரி, சி.நற்குணலிங்கம், துரை.கணசேமூர்த்தி ஆகியோர் இதழுக்கு ஆக்கங்களை வழங்கியுள்ளனர். மலரின் வெளியீட்டுரையை ஓய்வுபெற்ற அதிபர் வ.கணேசமூர்த்தி நிகழ்த்தியுள்ளார். மதிப்பீட்டுரையை சைவப்புலவரும் ஆசிரியருமான நி.பாபுதரன் நிகழ்த்தினார். (ச- 25)

## லெனினிசக்கட்சியின் மேதினப் பேரணி!

யாழ்ப்பாணம்,மே.3
உலகத் தொழிலாளர்களின் 8 மணிநேர வேலைக்கான போராட்டத்தின் புரட்சிகர நினைவான 139 ஆவது ஆண்டு மே தினத்தை முன்னிட்டு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் ஏற்பாட்டில் மே தினப்பேரணியும், பொதுக்கூட்டமும் யாழ்.நகரில் முன்னெடுக்கப்பட்டன.
குறித்த மேதினப் பேரணி பிரதான வீதிகள் ஊடாகச் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்துக்கு எதிரே அமைந்துள்ள றிம்மர் மண்டப வளாகத்தைச் சென்றடைந்தது.
பேரணியில் கலந்துகொண்டவர்கள் ‘வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு உரிய தீர்வை வழங்கு!’, ‘பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்து செய்! புதிய சட்டம் வேண்டாம்!!’, ‘சிறையிலிருக்கும் அரசியற்கைதிகளை விடுதலை செய்!’, ‘மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் நாள்சம்பளமாக 2500 ரூபாவை வழங்கு!’, எமது கடற்பரப்பில் இந்திய றோலர் படகு மீன் கொள்ளைக்கு முடிவு கட்டு!, வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பைத் தடுத்து நிறுத்து!, தேசிய இனங்களின் பிரச்சினைக்குச் சுயாட்சித் தீர்வு வழங்கு! உள்ளிட்ட பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு பேரணியில் பங்கேற்றனர். (ச-22,66)



## தரையில் கடலுணவு நுகர்வோர் விசனம்

பாஷையூரில் சுகாதார விதிமுறைகளை மீறித் தரையில் வைத்து கடலுணவுகளை விற்பனைசெய்வதாக நுகர்வோர் குற்றஞ்சாட்டியுள்ளனர். மீன் விற்பனைச் சந்தைக்கட்டடம் இருந்தும் வியாபாரிகள் கடும் வெயிலுக்கு மத்தியில் தரையில் வைத்து கடலுணவுகளை விற்பனை செய்கின்றனர். இதனால் சந்தைக்கட்டடமும் வெறிச்சோடிக் காணப்படுகிறது. அதேசமயம் மீன்களை ஏலம் கூறும் சந்தைக்கட்டடத்திலும் வியாபாரிகள் சிலர் கடலுணவுகளை தரையில் வைத்து விற்பனை செய்வதாக நுகர்வோர் குறிப்பிட்டுள்ளனர். (ச- 25,17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம் 26 . 06 . 1941

மறைவு 02 . 05 . 2025

## திரு. ஆறுமுகம் சந்திரசேகரம்

(வவுனியா சூடுவெந்தபுலவு மகா வித்தியாலயத்தின் ஓய்வு பெற்ற உப அதிபரும், யாழ்/ கொக்குவில் இந்துக் கல்லூரியின் ஓய்வு பெற்ற ஆசிரியர்)

வேலணை கிழக்கு, 2ம் வட்டாரம் அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கட்டுவன் மற்றும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. ஆறுமுகம் சந்திரசேகரம் அவர்கள் நேற்று (02.05.2025) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம்-சின்னம்மா தம்பதியின் ஆசை மகனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம்-முத்துலட்சுமி தம்பதியின் அன்பு மருமகனும் பரமதேவி அவர்களின் பாசமிகு கணவரும் கிஷோக்குமார், சுரேஸ்குமார், ஜெயக்குமார், நிரேஸ், சிந்துஜன் ஆகியோரின் ஆருயிர் தந்தையும் செல்லத்துரை, காலஞ்சென்றவர்களான நவரத்தினம், சொக்கலிங்கம், சோதிலிங்கம், கருணாகரன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் சுஜிதா, நித்தியநிரந்தரி, முகுந்தினி, அம்பிகாஅபிராமி, கங்கா தர்ஷினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஓவியா, நட்சத்திரா, கார்த்திகன், ஆதித்தியன், அனிஷா, லிதுஷன், ஆஷினி, அக்ஷரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜயரத்தன மலர்ச்சாலையில் இன்று (03.02.2025) சனிக்கிழமை பிற்பகல் 02.30 மணியிலிருந்து மாலை 07.30 மணி வரையும் மறுநாள் காலை 04.05.2025 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 08.30 மணியில் இருந்து அஞ்சலிக்காக வைக்கப்பட்டு முற்பகல் 11.00 மணியளவில் ஈமக்கிரியைகள் ஆரம்பித்து பிற்பகல் 01.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்.
கிஷோ (மகன்)-071 851 8486
சுரேஷ் (மகன்)-077 680 5119
ஜெயம் (மகன்)-416 333 9078
நிரேஷ் (மகன்)-077 923 1901
சிந்துஜன் (மகன்)-447 578 155084

மிகச்சிறந்த ஆட்டத்தால்

# ஹைதராபாத்தை நேற்று தோற்கடித்தது குஜராத்!



ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், ஹைதராபாத்தைத் தோற்கடித்து மிகச் சிறப்பான வெற்றியைப் பதிவுசெய்தது குஜராத்.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஹைதராபாத் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய குஜராத் அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 224 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக கில் 76 ஓட்டங்களையும், பட்லர் 64 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குக் களமிறங்கிய ஹைதராபாத் அணிக்கு அபிஷேக் சர்மா 74 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தாலும் மறுமுனையால் எவரும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தவில்லை. 17 பந்துகளை எதிர்கொண்ட இஷான் கிஷான் வெறும் 13 ஓட்டங்களைப் பெற்றமை அணியைப் பின்னடைவுக்குள் தள்ளியது. முடிவில் 186 ஓட்டங்களை மட்டுமே ஹைதராபாத்தால் பெறமுடிந்தது. முடிவில் 38 ஓட்டங்களால் வெற்றிபெற்றது குஜராத்.

**புள்ளிப்பட்டியல்**

இந்த வெற்றியின் மூலம் புள்ளிப்பட்டியலில் குஜராத் அணி இரண்டாவது இடத்துக்கு முனனேறியுள்ளது. மும்பை முதலாவது இடத்திலும், பெங்களூர் மூன்றாவது இடத்திலும், பஞ்சாப் நான்காவது இடத்திலும் உள்ளன. இன்றைய ஆட்டத்தில் பெங்களூரும் சென்னையும் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# டக்ளஸ் தாக்கியதாகக்கூறி ஒருவர் மருத்துவமனையில்!

யாழ்ப்பாணம், மே 3

ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகமும், முன்னாள் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவும், அவருடைய குழுவினரும் தாக்கியதாகக்கூறி நபரொருவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறை கரம்பொன் பகுதியில் நேற்று இடம்பெற்ற தேர்தல் கூட்டத்தை முடித்துவிட்டுத் திரும்பும்போது, அந்த நபர் டக்ளஸ் தேவானந்தாவுடனும் அவருடைய குழுவினருடனும் தர்க்கம் புரிந்துள்ளார். இதையடுத்தே, அவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. தாக்குதலில் காயமடைந்தவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (அ-ம-125)

# மரண அறிவித்தல்



## திருமதி சிவதவநாயகி யோகநாதன்

மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், தோப்பு வீதி, மட்டுவில் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவதவநாயகி யோகநாதன் அவர்கள் நேற்று (02.05.2025) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வினாசித்தம்பி-அன்னப்பிள்ளை தம்பதியின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் நல்லம்மா தம்பதியின் பாசமிகு மருமகளும் யோகநாதன் அவர்களின் பாசமிகு மனைவியும் சிவயோகலிங்கம் (லண்டன்), காலஞ்சென்ற கணேசலிங்கம் மற்றும் கோகுலவாணி, பரமலிங்கம், புஸ்பராணி (ஆசிரியர் யா/அல்வாரை அ.த.வி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் கஸ்தூரி (கலைப்பீடம் முகாமைத்துவ உதவியாளர் யாழ் பல்கலைக்கழகம்), சார்மினி, வசந்தா, வானுஷா, தர்சன் (Fx Creation Studio), பிருந்தா (பேராதனைப் பல்கலைக்கழகம்-வணிகபீடம்), கம்சனா (பேராதனை பல்கலைக்கழகம் -விவசாயபீடம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் கிருபாகரன், விஜேந்திரன் (விஜேந்திரா ஸ்ரூடியோ), மகிந்தன் ஆகியோரின் பாசமிகு மாமியும் தேனுஜன், ஹர்ணிகா, டனிஹர்சன், அக்சயா, அகரன், அகுரத், அதீரா, ஆகீசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சுப்பிரமணியம் (ஓய்வு நிலை அதிபர்), காலஞ்சென்றவர்களான சிவஞானம் (ஓய்வு நிலை அதிபர்), கணேசநாதன், மற்றும் மதிவதனசுந்தரி, யோகம்மா, திருச்செல்வநாதன் (கனடா), தங்கேஸ்வரி (லண்டன்), நவிலகுமார் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (04.05.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணியளவில் கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மட்டுவில் ஊரிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தோப்பு வீதி,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.
077 497 3691

# மரண அறிவித்தல்



தோற்றம் 06 . 06 . 1933

மறைவு 30 . 04 . 2025

## திருமதி சரஸ்வதி நடராஜா

தொல்புரம் வடக்கம்பரையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு- வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. சரஸ்வதி நடராஜா அவர்கள் கடந்த 30.04.2025 கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற பொன்னையா-இராசம்மா தம்பதியின் அன்பு மகளும், காலஞ்சென்ற நடராசா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பரமானந்தம், சண்முகராசா, சீனிவாசகம், பொன்னுதுரை, இராமநாதன், கைலைநாதன் மற்றும் கனகாம்பிகை, தனலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சாந்தினி மற்றும் மாலினி, Dr.வசந்தினி, Dr.மேனகா, சிவசக்தி ஆகியோரின் அன்புத்தாயாரும், இராமநாதன், சோமஸ்கந்தன், குலசிங்கம், உமாதேவா, முரளிகரன் ஆகியோரின் அன்பு மாமியும் Dr.அபிராமி, Dr.மால்மருகன், Dr.ஆரணி, சரவணன், இசானி, இசாந்த், சங்கவி, Dr.சுகிதரன், Dr.அபிநாவ், Dr.ஷாலினி, லிண்டல் ஆகியோரின் பாசமிகு பேத்தியும் ஆர்த்தி, அஸ்வின், லாஷ்யா, ஆதியா, சூரியா ஆகியோரின் அருமை பூட்டியும் ஆவார்

அன்னாரின் பூதவுடல் நாளை (04.05.2025) ஞாயிற்றுகிழமை முற்பகல் 9.00 முதல் நண்பகல் 12.00 மணி வரை 591 Galle Rd Dehiwela எனும் முகவரியில் அமைந்துள்ள மஹிந்த மலர் சாலையில் பார்வைக்கு வைக்கப்பட்டு பின்னர் ஈமைகிரிகைகள் நடைபெற்று தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
கனடா -முரளி நவரத்தினம்- Cell:+1647 868 3243.
ஸ்ரீலங்கா-இராமநாதன்- Cell +94779022900
ஆஸ்திரேலியா-மாலினி-Cell+61413264147

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் 01.05.2025 வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார். சுவாமிகளின் இழப்பு தமிழ்பேசும் அனைத்து உள்ளங்களிலும் பேரிழப்பாகும். எம் பெருமான் வண்ணைஸ்ரீவேங்கடேச வரதராஜப்பெருமான் பாதங்களில் என்றும் இன்புற்று இருக்க எம்பெருமான் நாராயணன் பாதம் அடிபணிகின்றோம்.

**ஓம் சாந்தி. சாந்தி!! சாந்தி!!!**

**வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப்பெருமாள்**
**தேவஸ்தானம் ஆதீன மகாசபை**
**யாழ்ப்பாணம்**

## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கும் உணவகம் ஒன்றிற்கு உணவு பரிமாறுபவர் மற்றும் கொத்து, ரைஸ் மற்றும் ரொட்டி போட தெரிந்தவர்கள் தேவை தொடர்பு கொள்ளவும்.

தொ.இல :- 0772030625

## இரங்கல் செய்தி



நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிள் 01.05.2025 வியாழக்கிழமை இரவு இறையடி சேர்ந்தார். சுவாமிகளின் இழப்பு ஈழத் தமிழருக்கு மட்டுமல்லாது உலகெங்கும் வாழும் தமிழ் மக்களுக்கு பேரிழப்பாகும். ஆனந்த நடராஜப் பெருமான் திருப்பாதங்களில் என்றும் இன்புற்று இருக்க ஆடல் வல்லோனை அடிபணிகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**நிர்வாகம்**
**சைவபரிபாலன சபை**
**யாழ்ப்பாணம்.**

## குருபூஜையும் சொற்பொழிவும்

யாழ்ப்பாணம், மே 3

சைவ வாழ்வியலில் திருவிளையாடற்புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகச் சிவஸ்ரீ. பால.திருகுணானந்தக் குருக்கள் நடத்தும் வாராந்த திருவிளையாடற்புராணச் சிறப்புச்சொற்பொழிவும், மாதந்தோறும் ஈழத்து சமயப்பெரியார்கள் குருபூஜை விழாவும் சிவாகம ஞானபானு சிவஸ்ரீ. குமாரசாமிக்குருக்கள் குருபூஜை விழாவும் சிறுப்பிட்டி மேற்கு அருள் மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம் பெறவுள்ளது.

சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ள நிகழ்வில் ஆன்மீகவிருந்தினராகக் கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஸ்ட விரிவுரையாளர் சமூகமாமணி கலாநிதி பா. தனபாலன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். சிவாகம ஞானபானு சிவஸ்ரீ. குமாரசாமிக் குருக்கள் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வும், சைவப்புலவர் பிரசங்க பூஷணம் செ. த. குமரனின் "குமாரசாமிக்குருக்களும் சமயப்பணியும்" எனும் விடயப் பொருளில் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளன. சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படும். (ச–41,125)

## ஆத்மசாந்திப் பிரார்த்தனை



**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞனசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்**

இடர்மிகுந்ததொரு காலகட்டத்தில் சைவர்களின் தலைமைப் பொறுப்பை ஏற்றுத் திறம்பட பணியாற்றிய நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞனசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் இறைவன் திருவடி நிழலில் இளைப்பாறப் பிரார்த்திக்கின்றோம்.

சைவ வித்தியா விருத்திச் சங்கம் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், இல்ல முகாமைத்துவச் சபை உறுப்பினர்கள், இல்லச் சிறார்கள், பணியாளர்கள்.

**கலாசாலை வீதி,**
**திருநெல்வேலி.**

(CR (44904) D.

## கிளி/புனித அந்தோனியார் றோ.க.வித்தியாலயம் முரசுமோட்டை பரந்தன்
## பழைய மாணவர் சங்க மீள் உருவாக்கத்திற்கான பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்

கிளி/ புனித அந்தோனியார் றோ.க.வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கம் மீள் உருவாக்கத்தின் பொருட்டு எதிர்வரும் (10.05.2025) பொதுக் கூட்டம் நடைபெறும். சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் பாடசாலை பிரதான மண்டபத்தில் பொதுக்கூட்டம் நடைபெறும். இப் பொதுக் கூட்டத்தில் அனைத்து பழையமாணவர்களும் தவறாது கலந்து கொள்வதுடன் தங்களது ஆக்கபூர்வமான கருத்துக்களையும் முன்வைக்குமாறு வேண்டுகின்றேன். அத்துடன் இச் செய்தியை பிரசுரிப்பதன் மூலம் புதிய நிர்வாகக் குழு தெரிவு செய்யும் வேளை இதற்கு முன் இருந்த ஏனைய இப் பாடசாலையின் பழைய மாணவர் சங்கங்கள் அனைத்தும் செயலற்றுப் போகும் என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**குமாரசிங்கம் பாலகுமார்**
**அதிபர்**
**கிளி/ புனித அந்தோனியார் றோ.க.பாடசாலை**

## தவறவிடப்பட்டுள்ளது

Pocket Purse, (NIC- 200328710935) மற்றும் License (Blue Colour Purse) தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ் உள்ள தொலைபேசி எண்ணிற்கு தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 075 845 4754

## மணமகள் தேவை

யாழ் இந்து 1985ல் பிறந்த ஜேர்மன் PR உடைய மணமகனுக்கு விஸ்வகுல மணமகள் தேவை.

தொடர்பு:- 077 044 3589

(CS/58144) J-1

## மரண அறிவித்தல்



**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞனசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்**

சுவாமி அவர்கள் நேற்று முன்தினம் (01.05.2025) வியாழக்கிழமை இறைவனடி சோர்ந்தார்.

அவர்களின் மறைவுச்செய்தியறிந்து ஆழ்ந்த துயருறுவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**இனுவில்**

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 16 • 07 • 1939



மறைவு 02 • 04 • 2025

**கடந்த 02.04.2025 புதன்கிழமை அன்று இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்**

**அமரர் சிவனுத்தேவர் கறுப்பசாமி**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (04.05.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் **பிடாரி அம்மன் கோவில் மண்டபத்தில்** நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

இல. 8, வாராகி கோவில் வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

**குடும்பத்தினர்**
**சந்திரன்** - 077 935 2253

(CS/58142) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் மேதினப் பேரணி!

மன்னார்.மே, 3

சுரண்டல், ஒடுக்குமுறை மற்றும் அடக்குமுறைக்கு எதிராக மக்கள் திட்ட வரைபு ஒன்றியத்தால் 'விவசாய சக்தியைக் கட்டியெழுப்புவோம்' எனும் தொனிப்பொருளில் மேதினப் பேரணி நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

குறித்த பேரணி பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு பிரதான வீதியூடாக மன்னார் பஜார் பகுதியை நோக்கிச் சென்றது. பேரணியில் கலந்துகொண்டவர்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தை உடனடியாக நீக்கு, அநுர அரசே காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு பதிலை தா, அரசியல் கைதிகளை உடனே விடுதலை செய், விவசாய காணிகளை விகாரைக்கு பறிக்காதே, காற்றாடி செயல் திட்டத்திற்கு அனுமதி அளிக்காதே, கச்ச தீவை தாரை வார்க்காதே, இந்திய இழுவைப் படகுகளின் வருகையை நிறுத்து, காணி அபகரிப்பையும், அத்துமீறிய குடியேற்றத்தையும் நிறுத்து உள்ளிட்ட பல்



வேறு கோஷங்களை எழுப்பினர். தொடர்ந்து மன்னார் பஜார் பகுதியில் மே தினக் கூட்டம் இடம்பெற்றது.

(ச-22,56)

## ஐ.தே.க.வும்...

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வீழ்ந்த கட்டத்திலும் பார்க்க தற்போது ஐக்கிய தேசியக் கட்சி சிறந்த நிலையில் உள்ளது. ரணிலால் மட்டுமே நாட்டை மீட்கமுடியும் என கிராம மக்கள் நம்ப ஆரம்பித்துள்ளனர். ரணிலின் முக்கியத்துவம் உணரப்பட்டு வருகின்றது. எனவே, உள்ளூராட்சித் தேர்தலில் சிறந்த பெறுபேறு கிட்டும் என நம்புகின்றோம்.

அத்துடன், பெரமுனவும் மீண்டெழுந்து வருவதை அவதானிக்கமுடிகின்றது. பெரமுனவின் கணிசமான வாக்காளர்கள் கடந்த தேர்தலில் அநுர அரசாங்கத்துக்கு வாக்களித்தனர். அவர்கள் தற்போது மீண்டும் பெரமுனவின் பக்கம் திரும்பியுள்ளனர் - என்றார். (அ-ம-44)

## நல்லை...

நாள்களாகக் கொழும்பில் சிகிச்சை பெற்று வந்த நல்லை ஆதீனம் நேற்றுமுன்தினம் இரவு இறைபதமெய்தினார். அவரின் புகழுடல் கொழும்பிலிருந்து இன்று எடுத்துவரப்பட்டு, பொதுமக்களின் அஞ்சலிக்காக நேற்று வைக்கப்பட்டது. மதத்தலைவர், பிரமுகர்கள், பொதுமக்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் அஞ்சலி செலுத்தியதைத் தொடர்ந்து, இறுதிக் கிரியைகள் இடம்பெற்று அவரின் புகழுடல் தகனம் செய்யப்பட்டது. (அ-ம-66)

## இனவாதப்...

ரையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கிலும், தெற்கிலும் மக்களைப் பிரித்தாளும் இனவாதத்தைத் தோற்கடித்து, முன்னோக்கி செல்வதற்காக தேசிய மக்கள் சக்திக்கு இம்முறையும் மக்கள் பேராதரவு வழங்கவேண்டும். இன ஒற்றுமையை ஏற்படுத்தினால்தான் இந்தநாட்டை முன்னோக்கிக் கொண்டுசெல்லமுடியும். எனவேதான் இந்த விடயத்துக்கு முன்னுரிமையும், முக்கியத்துவமும் வழங்கிச் செயற்பட்டுவருகின்றோம்.

வாக்கு அரசியலுக்காக மக்களைப் பிரித்தாளும் அரசியலை ராஜபக்ச அணி தெற்கில் முன்னெடுத்துவருகின்றது. கடந்த காலங்களில் மக்கள் பாடம் புகட்டியும் அவர்கள் திருந்துவதாக இல்லை. அதேபோல வடக்கிலுள்ள சிலரும் ராஜபக்சக்களின் சகோதரர்களாக மாறி மக்களை பிரித்தாளும் பரப்புரைகளை மேற்கொள்கின்றனர்.

வடக்கு, கிழக்கு பிரதேசங்களுக்காக எமது அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் பல இருக்க, எதுவுமே நடக்கவில்லை என்பதுபோல் பரப்புரைகளைச் செய்கின்றனர். ஆனால் வடக்கிலும், தெற்கிலும் இனவாத அரசியலுக்கு மக்கள் இனியும் இடமளிக்கமாட்டார்கள் என்பது உறுதி. அதற்கான சிறந்த செய்தியை 6 ஆம் திகதி மக்கள் வழங்கவேண்டும் - என்றார். (அ-ம-26)

## சகல...

னம்பலம் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியப் பேரவை நடத்திய மேதினக் கூட்டம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை 6 மணியளவில் வடமராட்சி மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது. அங்கு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த உள்ளூராட்சித் தேர்தலில் தமிழர்கள் மிகத் தெளிவாகவும் ஆணித்தரமாகவும் தங்கள் வாக்குகளைச் செலுத்தாதுவிட்டால் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கைவிட்டுவிட்டார்கள் என்பது உறுதியாகிவிடும். ஒருமுறை மாறிப்போடலாம் அதை நியாயப்படுத்தலாம், அடுத்தடுத்த தேர்தலிலும் அவ்வாறு நடந்தால் அதை நியாயப்படுத்தமுடியாது. அந்த வகையிலே இது சாதாரண உள்ளூராட்சித் தேர்தல் அல்ல. முகங்களுக்கு வாக்களிக்கும் இந்தத் தேர்தல்தான் தமிழ் மக்கள் தங்களின் அரசியல் அபிலாஷைகளை வெளிப்படுத்தும் தேர்தலாக மாறியுள்ளது. எனவே, இவ்வாறான விடயங்களைக் கருத்திற்கொண்டு எமது மக்கள் ஆழமாகச் சிந்தித்து தமது வாக்குகளைச் செலுத்தவேண்டும்.

தமிழ்த் தேசத்தைப் பொறுத்தவரையில் இன்று இரு முக்கியமான விடயங்கள் உள்ளன. ஒன்று இனப்படுகொலைக்கு பொறுப்புக் கூறல். மற்றையது இனப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்குதல். இந்த விடயங்களில் ஜே.வி.பி. என்ற தேசிய மக்கள் சக்திக்கும் இதற்கு முன்னர் ஆட்சி செய்த இனவாத கட்சிகளுக்கும் இடையே எந்த வித்தியாசமும் இல்லை.

நாம் தமிழரசுக் கட்சிக்கு எதிரானவர்கள் அல்லர். தலைமைத்துவம் தவறாக நடத்தப்படுவதால் ஒட்டுமொத்த கட்சியும் தவறான பாதையில் செல்லும் நிலையே காணப்படுகின்றது. ஆதலால், எந்தளவுக்கு தேசிய மக்கள் சக்தியை ஓரங்கட்டவேண்டுமோ அந்தளவுக்கு தமிழரசுக் கட்சியையும் ஓரங்கட்டவேண்டும். அப்படி ஒரு தெளிவான பாடம் கற்பித்தால் மட்டும்தான் தமிழரசுக் கட்சிக்குள் இருக்கும் நேர்மையான உறுப்பினர்கள் மேலோங்கமுடியும். இது தமிழரசுக் கட்சியைத் தோற்கடித்து முற்றுமுழுதாக ஓரங்கட்டும் செயற்பாடு அல்ல. அப்படிச் செய்யமுடியாது. செய்யவும் கூடாது. தமிழரக் கட்சி தவறான கொள்கையை கைவிட்டு அந்தக் கட்சியை நிறுவிய தந்தை செல்வநாயகத்தின் கொள்கையின்படி நேர்மையாகப் பயணிக்க முன்வரவேண்டும். அப்படியொரு நிலை வந்தால், அவர்களுடன் நாங்கள் இணைந்து பயணிப்போம்-என்றார். (அ-ம-100)

## முறைப்பாடு...

முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இதன்படி, வன்முறை சம்பவங்கள் தொடர்பில் 26 முறைப்பாடு களும் தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 3,722 முறைப்பாடுகளும் ஏனைய விடங்கள் தொடர்பில் 250 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ-ம)

## வியட்நாமுக்கு...

இடம்பெறும் வெசாக் கொண்டாட்டங்களிலும் ஜனாதிபதி அநுர கலந்துகொள்ளவுள்ளார். (அ-ம-இ)

## தமிழின...

தெரிவித்ததாவது:-

2024ஆம் ஆண்டு வரையில் தமிழர்களின் பகுதிகளான வடக்கு - கிழக்கில், தேசிய மக்கள் சக்தி என்ற ஒன்று இருக்கவில்லை. இன்னும் ஒரு வருடத்துக்குள் இந்தத் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கதை முடியும். ஏனெனில், நாட்டின் பொருளாதார நிலைமை அவ்வளவு மோசமாகவே சென்றுகொண்டிருக்கிறது.

நாட்டில் உள்ள ஜனாதிபதியும், அமைச்சர்களும் இன்று வடக்கிலும் கிழக்கிலுமே சுற்றிக்கொண்டிருக்கின்றனர். 'தமிழ் மக்களுக்கு அரசியற்தீர்வை வழங்குவீர்களா?' என்று கேட்டால், அவர்களிடம் இருந்து எந்தப் பதிலும் வராது. எமது பிரதான பிரச்சினைகளை விட்டுவிட்டு வேறு எவற்றையோவெல்லாம் பேசிக்கொண்டிருக்கின்றனர்.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து பேசுவதற்கு தேசிய மக்கள் சக்தியில் உள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அரசாங்கம் சந்தர்ப்பம் வழங்குவதில்லை. பிமல் ரத்நாயக்கவின் செல்லப்பிள்ளைகளுக்கு மட்டுமே நேரம் ஒதுக்கப்படும். இத்தகையவர்கள் எங்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பார்கள் என்று எவ்வாறு நம்புவது? - என்றார். (அ-ம-இ)

## பிரதித்...

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் உதவித் தேர்தல் ஆணையாளராகச் செயற்பட்டுவந்த நிலையிலேயே, அவருக்குப் பிரதித் தேர்தல் ஆணையாளராகப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

## இன்று...

கொழும்பு மற்றும் யாழ். மாநகரசபைகள் உட்பட 336 உள்ளூராட்சி சபைகளுக்குரிய தேர்தல் 6ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதனை முன்னிட்டு கடந்த சில வாரங்களாகப் பரப்புரைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. இந்தப் பரப்புரைகள் அனைத்தும் இன்று நள்ளிரவுடன் முடிவுக்கு வந்து, நள்ளிரவின் பின்னர் 'தேர்தல் அமைதிக்காலம்' ஆரம்பமாகவுள்ளது.

வடமாகாணத்தைப் பொறுத்தவரை, தேர்தல் வேட்புமனுக்கள் பல நிராகரிக்கப்பட்ட காரணத்தால் ஆரம்பத்தில் தேர்தல் தொடர்பான ஆர்வம் மக்களிடத்தில் அவ்வளவாக இருக்கவில்லை. எனினும், கடந்த சில நாள்களாக கட்சிகளும் சுயேச்சைகளும் தீவிரப் பரப்புரையில் ஈடுபடும் நிலையில், தேர்தல் பரபரப்புத் தொற்றியுள்ளமையை அவதானிக்கமுடிகின்றது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்க் கட்சிகள் போதிய பிரதிநிதித்துவத்தை இழந்திருந்தன. ஆதலால், இம்முறை மக்களின் ஆதரவு தமக்கு உள்ளது என்பதை நிரூபிக்கவேண்டிய கட்டாயத்தில் அவை உள்ளன.

அத்துடன், தமது ஆட்சிக்கு மக்கள் ஆணை உள்ளது. அது தொடரவேண்டும் என்பதே மக்களின் நிலைப்பாடு என்பதை வெளிப்படுத்துவதற்காக உள்ளூராட்சிசபைத் தேர்தலிலும் வெற்றிபெறவேண்டும் என்பதில் ஆளுங்கட்சியான தேசிய மக்கள் சக்தி தீவிரம்காட்டி வருகின்றது. மறுமுனையில், தற்போதைய அரசாங்கம் பொய்கூறியே ஆட்சிக்கு வந்ததாகவும், வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்பதையும் மையப்படுத்தி பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தீவிர பரப்புரைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## மே 8,...

மன்றம் கூடவுள்ள இரண்டுதினங்களுக்கும் உரித்தான நாடாளுமன்றச் செயற்பாடுகள் தொடர்பில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-ம-இ)

## புலிகளின்...

ணங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. பதில் பொலிஸ்மா அதிபரால் பொறுப்பேற்கப்பட்ட தங்கம் மற்றும் வெள்ளி என்பனவற்றின் பெறுமதி, நீதிமன்ற உத்தரவின் பிரகாரம், இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரண அதிகார சபையூடாக மதிப்பிடப்படவுள்ளது. பின்னர் அவற்றை இலங்கை மத்திய வங்கியிடம் ஒப்படைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. (அ-ம-இ)

## தெல்லிப்பழை...

மருத்துவ நிபுணர்களின் ஒருமித்த சேவையை நோயாளர்களுக்கு வழங்க இயலாத வகையில் புறச்சூழ்நிலை களை உருவாக்கும் செயற்பாடுகளும், நிபுணர்களால் முன்மொழியப்படும் சிகிச்சைத் திட்டங்களை உரிய தரப்புகளுடன் கலந்துரையாடாமல், எதேச்சதிகாரமாக நிராகரிக்கும் செயற்பாட்டிலும் மருத்துவமனை நிர்வாகம் ஈடுபட்டுவருகின்றது.

இந்த விடயங்கள் தொடர்பில் தெளிவாகச் சுட்டிக்காட்டி மருத்துவர்களால் சில கோரிக்கைகள் நிர்வாகத்திடம் வலியுறுத்தப்பட்டுள்ளன. அத்துடன், மருத்துவமனையில் நிலவும் நிர்வாகச் சீர்குலைவைச் சுட்டிக்காட்டி சிறப்பு அறிக்கையும் வெளியிடப்பட்டுள்ளது. இந்த விடயங்களுக்கு விரைவில் தீர்வு வழங்கப்படாவிட்டால், தேர்தலுக்குப் பின்னர் தொடர்ச்சியான தொழிற்சங்க நடவடிக்கைகள் இடம்பெறும்-என்றனர். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேஷம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாக முடிவெடுப்பீர்கள். அதனால் நன்மையே ஏற்படும். எதிர்ப்புகளும் விமர்சனங்களும் நீங்கும். சகோதரர்கள்மூலம் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. பிள்ளைகள் ஆலோசனை கேட்டு வருவார்கள்.

**இடபம்:** புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். சகோதரர்களால் அனுகூலம் உண்டா கும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. ஆனால், குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும்.

**மிதுனம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உறவினர்கள்மூலம் ஆதாயம் கிடைக் கும். முக்கியப் பிரமுகர் மூலம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். சகோதரர்கள் உதவிகேட்டு வருவார்கள். தந்தையாரின் உடல் ஆரோக்கியத்தில் கவனம்செலுத்தவும்.

**கடகம்:** இன்று எதிலும் பொறுமையுடனும் சிந்தித்தும் செயல்படவேண்டியநாள். முக்கிய முடிவுகள் எடுப்பதைக் கண்டிப்பாகத் தவிர்த்து விடவும். உறவினர்களுடன் பேசும்போது பொறு மையைக் கடைப்பிடிக்கவும். வாழ்க்கைத்துணை யுடன் இணக்கமாக நடந்துகொள்வது அவசியம்.

**சிம்மம்:** மனதுக்கு மகிழ்ச்சிதரும் சம்பவங்கள் நிகழும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. தாய்மாமன்வழியில் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நி யோன்யம் அதிகரிக்கும். மன உறுதியுடன் செயற்ப டுவீர்கள்.

**கன்னி:** தேவையான பணம் இருப்பதால் செலவு களைச் சமாளித்துவிடுவீர்கள். தாய்மாமன்வழியில் சுபச்செலவு ஏற்படும். சகோதரர்களால் சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது. வியாபாரத்தில் விற்பனையை அதிகரிப்பதில் பணியாளர்கள் உற்சாகம் காட்டுவார்கள்.

**துலாம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாளாக இருக்கும். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து கொடுப்பீர்கள். வாழ்க்கைத் துணையின்முயற்சிக்குஒத்துழைப்புக்கொடுப்பீர்கள்.

**விருச்சிகம்:** வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம்தேவை. உறவினர்களால் குடும்பத்தில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். பிள்ளை களால் தேவையற்ற செலவுகள் ஏற்படும். சிலருக்கு அதிகரிக்கும் பணிச்சுமையின் காரணமாக உடல் அசதி ஏற்படக்கூடும்.

**தனுசு:** எதிர்பார்த்த பணவரவு இருந்தாலும், எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். மற்றவர் களுடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு இருப்ப தால், பேசும்போது பொறுமை அவசியம். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் இணக்க மாக நடந்துகொள்ளவும்.

**மகரம்:** மகிழ்ச்சியான நாள். குடும்பப் பொறுப்பு களில் உற்சாகமாக ஈடுபடுவீர்கள். பிள்ளைகள் கேட்பதை மகிழ்ச்சியுடன் வாங்கிக்கொடுப்பீர்கள். உங்கள் முயற்சிக்கு பெற்றோரின் ஆதரவு கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத பண வரவுக்கு வாய்ப்பு உண்டு.

**கும்பம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவுகள் எதுவும் இன்றைக்கு எடுக்க வேண்டாம். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

**மீனம்:** புதிய முயற்சிகளை பிற்பகலுக்குமேல் தொடங்கவும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதில்பெரியவர்களின் ஆலோசனை அவசியம். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் கிடைக்கவாய்ப்பு உண்டு. சிலருக்கு எதிர்பாராத பணவரவுடன் திடீர்ச்செலவுகளும் ஏற்படும்.

# தமிழ் மக்களை ஏமாற்றுவதை இனியும் அனுமதிக்கமாட்டோம்

## சுமந்திரன் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், மே 3**

**பொய்யான வாக்குறுதிகளை வழங்கி நாட்டு மக்களை ஏமாற்றுவதை அரசாங்கம் நிறுத்திக்கொள்ளுங்கள். தமிழ் மக்களை இனியும் ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை என்பதுடன் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை யாழ்.மண்ணில் கால்பதிக்கவும் விடமாட்டோம் என்று தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.**

யாழ் . வீரசிங்க மண்டபத்தில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மேதினக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இன்றைய மேநாளில் நாம் சில தீர்மானங்களையும் எடுத்துள்ளோம். குறிப்பாக இராணுவ கையிருப்பில் உள்ள எமது மக்களின் காணிகள் முழுமையாக விடுவிக்கப்பட வேண்டும், விலைவாசி உயர்வைக் குன்றக்க வேண்டும், தொழிலாளர் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். இன்றைக்கு நாட்டில் நாளாந்தம் விலைவாசி அதிகரித்துக் கொண்டே செல்கிறது. குறிப்பாக சீனியை விட உப்பின் விலை அதிகரித்துள்ளது. அதிலும் ரஜலுனு என உப்புக்கு ஒரு புதிய பெயரை வைத்தவர்கள் அதைப் பற்றிக் கேட்டால் பெயரைப் பார்க்காதீர்கள் ருசியைப் பாருங்கள் எனச் சொல்கிறார்கள். சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தம் தங்களது அடிப்படைக் கொள்கைக்கு மாறானது எனக் கூறி அதற்கு எதிராக நீதிமன்றம் வரை சென்றவர்கள் இன்றைக்கு அந்த ஒப்பந்தத்தில் எதனையும் மாற்றாது அப்படியே ஏற்றுக்கொண்டு செயற்படுகின்றனர்.

கடன்மறுசீரமைப்பு செய்கிற போது தொழிலாளர வர்க்கத்திற்கு செய்யும் துரோகம் என்று சொன்னவர்கள் அதனையே இன்று பெருமையாக பேசிவருகிற நிலைமையை காணக்கூடியதாக உள்ளது.

எனவே முதலாளித்துவ கொள்கையை விட்டு விலகி உங்களது பழைய ஆரம்பத்துக்கு வாருங்கள். லெலினிச கோட்பாட்டுக்கு வாருங்கள் - என்றார். (ச-125)

# மஹோற்சவம்

*யாழ்ப்பாணம், மே 3*

*உசன் விடத்தற்பளை வயற்கரை முருகன் ஆலய மஹோற்சவப்பெருவிழா இன்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திருக்கல்யாண திருவிழாவுடன் இனிதே நிறைவுபெறவுள்ளது.*

*(ச-41)*

# கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், மே 3

மயிலம்புலம் சரவணை வேலணை 5 ஆம் வட்டாரம் அருள்மிகு திருப்பொலிக் கட்டுவன் வான் ஐயனார் திருக்கோவில் கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. இன்று சனிக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 3 மணி வரை எண்ணெய்க்காப்புச் சாத்தலும் இடம்பெறும். கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 12 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெறவுள்ளதால் உபயம் செய்ய விரும்புவோர் தேவஸ்தானத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)

**மணமகன் தேவை**

இந்து. கௌரவ குடும்பம், 1982, பூசநட்சத்திரம், 2ல் செவ்வாய், 10 ¾கிரகபாவம், BSc(Hons) Accounting. MBA (Finance). Manager in finance Company (UK Company) in Srilanka தொழில் புரியும்மணமகளுக்கு பெற்றோர் தகுந்த மணமகனை எதிர்பார்க்கின்றனர். (4058)

**077 958 3944**
aonebuilders2001@hotmail.com

**கட்டட ஒப்பந்தகாரர்களுக்கு**



சீனாவில் (China) இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட கொங்கிறிட் கலவையை தாங்கி நிற்கும் ஜக் முட்டுக்கள் (Steel Props) 10.5 Kg எடை கொண்டது இப்பொழுது எம்மிடம்.
இதை விட எடை குறைந்ததும், தரம் குறைந்ததும் சந்தையில் இருப்பதால் உங்கள் தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.
"நாங்கள் உங்களோடு"
ஆர்க் . என் . கம்பனி
150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
A9 வீதி, எழுதுமட்டுவாள். 070 191 3571
A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020
Hotline: 071 535 7799 / 071 535 7803

**யாழ் மாநகரசபைத் தேர்தல் 2025**
**ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி DTNA**



க.நிசாந்தன்
சட்டத்தரணி

உங்களின் தெரிவு



X



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org